# கீதாசாரியன்





ஆசிரியர்

**M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.**

P. T சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்.

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்.

7, தெற்கு மாட வீதி.
திருவல்லிக்கேணி : சென்னை-600005.



ஆண்டுச் சந்தா ரூ 8/ ]

[விலை காசு 75

## பொருளடக்கம்


1. ஆசிரியர் பக்கம் 1

2. திருமலையைப் பற்றி... 4
"ஆத்ரேயன்"

3. திருமலை — திருப்பதி 9
ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி

4. தொண்டரடிப்பொடியாழ்வார் 13
M. A. வேங்கடகிருஷ்ணன்

5. பகவானின் விரோதி (நாடகம்) 17
நப்பின்னை

6. பகவத் கீதாஸாரம் 23
P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

7. தொழுது எழு என் மனமே 28
R. வேங்கட ராமாநுஜதாஸர்

8. பன்னிரண்டு வைஷ்ணவ லக்ஷணங்கள் 31
தி. கோ. ராமாநுஜ தாஸர்

9. திருவாய்மொழியும் த்வயமும் 33
வேளுக்குடி K. வரதாசாரியர் ஸ்வாமி

10. தேவு மற்றறியேன் 37
Dr. V. V. ராமாநுஜம்

11. மோட்சத்துக்கு ஒரு வழி 41
சாண்டில்யன்

12. அழியாத கதாபாத்திரங்கள் 44
தீபம் நா. பார்த்தசாரதி

13. மார்கழிமாத உத்ஸவ விவரங்கள் 47

14. பஞ்சாங்கம் 48

15. எமது உளம் கனிந்த நன்றி 49


16. ஆஸ்திகரே! 50


---

மேலட்டையில்... திருமலை ஸ்ரீநிவாஸன் உத்ஸவர் (வஜ்ராங்கி)

ஸ்ரீ :

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | காளயுக்தி௵ | மார்கழிமீ | டிசம்பர் 78 | பகுதி 3

ஆசிரியர் : என்ன ஓய் ஆலவாயரே! உம்மை ஒரு மாதமாகக் காணவில்லையே! நீர் தமிழ்ப் பாட்டுக்களுக்கு எளிதில் பொருள் கூறிவிடுவீராமே! இது உண்மையா?

ஆலவாயன் : அதிலென்ன சந்தேகம்! அப்படி தமிழ்ப் பாட்டுக்குக் கூட பொருள் கூற முடியா விட்டால் என்னை நான் தமிழ்ப்புலவன் என்று கூறிக்கொள்ள முடியுமா?

ஆசிரியர் : அது வாஸ்தவம் தான்! ஆனாலும் வைணவப் பெரியார்கள் ஆழ்வார்களின் பாசுரங்களுக்குக கூறும் பொருள்கள் அற்புதமானவை. அவர்களைப் போல் ஆழ்வார்களின் உள்ளக் கருத்தை உணர்ந்து பொருள் கூறுவது யாராலும் முடியாது!

ஆலவாயன் : இது பற்றி நானும் கேள்விப் பட்டிருக்கிறேன்; ஆனால் படித்ததில்லை. ஆனால் தமிழ்ப் பாசுரங்களுக்குப் பொருள் கூறத் தமிழறிவு மட்டும் இருந்தால் போராதா!

அப்படியென்ன வைணவ ஆசாரியர்கள் பெரிய அர்த்தங்களைக் கூறி விட்டார்கள். என்னாலும் அத்தகைய அர்த்தங்களைக் கூற முடியும்.

ஆசிரியர் : எங்கே, அதையும்தான் பரீட்சித்துப் பார்த்து விடுவோமே! இப்போது நான் நம்மாழ்வாரின் திருவாய் மொழிப் பாசுரம் ஒன்றைச் சொல்லுகிறேன். அதன் அர்த்தத்தை நீர் கூறிவிடும் பார்க்கலாம்.

**''அறிவினால் குறைவில்லா அகல் ஞாலத்தவர் அறிய**
**நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறை ஞானத்தொருமூர்த்தி''**

இதன் உண்மையான பொருள் என்னவென்று கூற முடியுமா!

**ஆலவாயன் :** பூ! இவ்வளவுதானே! இதோ ஒரு நொடியில் கூறிவிடுகிறேன். கேட்டுக் கொள்ளும். **அறிவினால் குறைவில்லா**—குறைவற்ற அறிவை அதாவது, நிறைந்த அறிவை உடைய **அகல் ஞாலத்தவர் அறிய**—இவ் வுலகத்தவர்கள் அறியும்படியாக நெறியெல்லாம் எடுத்துரைத்த—உய்யும் வழிகளை யெல்லாம் (கீதையில்) எடுத்துரைத்த நிறை ஞானத் தொரு மூர்த்தி—ஞானமே வடிவெடுத்த எம்பெருமான் என்பது தான் இதன் பொருள்; இதற்கென்னவோ பிரமாதப் படுத்துகிறீரே!

**ஆசிரியர் :** அது சரி! அறிவு நிறைந்தவர்களுக்கு வழிகளை யெடுத்துக் கூற வேண்டிய அவசியமென்ன? தமக்குள்ள அறிவால் தாமே அவைகளைத் தெரிந்து கொள்ள மாட்டார்களோ? அறிவில்லாதவர்களுக்கு, அறிவில் குறைந்தவர்களுக்கன்றோ வழிகளை எடுத்துச் சொல்ல வேண்டும். எனவே நீர் கூறிய பொருள் முன்னுக்குப்பின் முரணாகவன்றோ இருக்கிறது.

**ஆலவாயன் :** அது வந்து..........நீர் கூறுவது உண்மை தான். நான் கூறும் பொருள் பொருந்தவில்லை என்பதை

ஒப்புக் கொள்கிறேன். இப்பாட்டிற்கு ஆசார்யர்கள் எவ்விதமாகப் பொருள் கூறுகின்றனர்!

**ஆசிரியர் :** அப்படிக்கேளும்! உலகில் ஒவ்வொருவனுக்கும் ஒரு குறை இருக்கும். நமக்குப் பணம் இல்லையே, துணியில்லையே, வீடு இல்லையே என்ற பலவித குறைகள் இருக்கும். ஆனால் நமக்கு அறிவு இல்லையே என்ற குறை மட்டும் ஒருவருக்கும் இருப்பதில்லை. எனவே "அறிவினால் குறைவில்லா - அறிவு இல்லையே என்ற குறை இல்லாதவர்களான, அகல் ஞாலத்தவர் அறிய—இவ்வுலகத்தவர்கள் அறியும் படியாக நெறியெல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத் தொருமூர்த்தி" என்பதுதான் ஆசாரியர்கள் செய்யும் வியாக்கியானம். இது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த்தீரா?

**ஆலவாயன் :** உண்மைதான். ஆழ்வார்களின் உள்ளக் கருத்தை அறிய வல்லவர்கள் ஆசாரியர்களே! உண்மையிலேயே எமக்கும் அறிவினால்குறை இருந்ததே இல்லை. ஆழ்வார் பாசுரங்களின் உண்மைப் பொருளை அறிய முடியவில்லையே என்ற அறிவுக்குறை இன்று தோன்றி விட்டது. ஆனால் அதைப் போக்கத்தான் கீதாசாரியன் வந்து விட்டானே. அவன் எடுத்துக் கூறும் நெறிகளை உணர்ந்தாலே நம் அறிவுக் குறை ஓடி விடுமே!

# திருமலையைப் பற்றி.........

## ஆத்ரேயன்

★ கோவிந்தா கோவிந்தா என்கிற பேரொலியுடன் நாடோறும் இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் தரிசனம் செய்ய ஓடோடி வரும் பக்தர்களின் கூட்டம் பெருகுமிடம் திருமலை.

★ வைணவர்கள் வணங்கும் நூற்றெட்டு திவ்யதேசங்களுள் முதன்மை பெற்றிருப்பவை கோயில் — திருமலை — பெருமாள் கோயில் என்ற மூன்று திவ்யதேசங்களாகும். அதில் நடுநாயகமாய் விளங்குவது திருமலை. இது ஸ்வயம்வக்த (தானே தோன்றிய) க்ஷேத்திரமாகும்.

★ ஆழ்வார்கள் பதின்மரில் தொண்டரடிப் பொடி ஆழ்வார் நீங்கலாக ஒன்பது ஆழ்வார்களாலும் ஆண்டாளா" லும் பாடல்பெற்ற தலமாகும். தொண்டரடிப் பொடிகளின் பாடல் இல்லாக் குறை நீங்க வருடத்தில் பதினொரு மாதங்களில் (வடமொழி) ஸுப்ரபாதத்தை திருச்செவி சாத்தும் எம்பெருமான் மாதங்களில் தலை சிறந்த மாதமான மார்கழி மாதத்தில் தொண்டரடிப் பொடிகளின் திருப்பள்ளியெழுச்சி கேட்டபிறகு தான் துயிலெழுகிறார்.

★ இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்க இலக்கியங்களான பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் இத்தலம் குறிப்பிடப் பட்டுள்ளது.

★ அச்சுதராயன், கோவிஜய தந்திவர்மன், திருமலை நாயக்கர்போன்ற அரசர்களாலும், சுந்தரச்சோழனின் மனைவி திருமலா தேவி, சின்னதேவி, போன்ற அரசாணிகளாலும் பல திருப்பணிகள் செய்யப்பட்டு, பலபல மதிப்பில்லா ஆபர

ணங்களும் வழங்கப்பட்டதாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.

★ திருவேங்கடம், வெங்கடாசலம், வெங்கடாத்ரி, ஏழுமலை என்றிப்படிப்பல பெயர்களால் வழங்கப்படுகிறது இத்தலம். பக்தர்களால் இத்தலம் திருப்பதி என்றழைக்கப் பட்டாலும் ஸம்ப்ரதாயமுணர்ந்தவர்கள் அது கோவிந்த ராஜன் ஸன்னிதியையே குறிக்கும் என்பர்.

★ இங்குள்ள ஏழுமலையின் பெயர்கள் சேஷாத்ரி, கருடாத்ரி, விருஷபாத்ரி, அஞ்சனாசலம், வெங்கடாசலம், நாராயணாசலம், ஸிம்ஹாத்ரி என்பன. இம்மலையின் உயரம் சுமார் மூவாயிரம் அடிகள்.

★ ஏழாவது மலையில் ஆநந்த நிலைய விமானத்தின்கீழ் நின்ற திருக்கோலத்துடன் நான்கு திருக்கைகளுடன் தரிசனம் தருகிறார் திருவேங்கடவன்

★ இவ்வெம்பெருமான் வடவேங்கடத்தான், திருவேங் கடத்தான், வேங்கடாசலபதி, திருமலேசன், ஸ்ரீநிவாஸன் ஏழுமலையான், பாலாஜி, வேங்கடரமணன் போன்ற பல பெயர்களால் போற்றப்படுகிறார்.

★ முன்பொருமுறை திருமாலுடன் ஊடல் கொண்ட ஸ்ரீமஹாலக்ஷ்மி, திருமாலை விட்டுப்பிரிந்து இங்கு வந்து அரச குமாரியாக (பத்மாவதியாகப்) பிறந்தாள் என்றும் அவளை மணந்து கொள்ள திருமாலே இங்கு வந்து சேர்ந்தார் எனவும் கன்யாசுல்கமாக நிறைய பொருள் கொடுக்க வேண்டியிருந்த தால் குபேரனிடமிருந்து கடன் வாங்கி, பத்மாவதியைத் திருமணம் புரிந்து கொண்டார் என்றும் கூறுவர். அவருடைய அந்தக் கடனைத் தீர்க்கவே பக்தர்களிடமிருந்து காணிக்கைகள் வந்த வண்ணமிருக்கின்றன போலும்.

★ தொண்டைமான் சக்ரவர்த்திக்கு உதவ, இப் பெருமான் ஒருமுறை தன் சங்குசக்கரங்களைக் கொடுத்ததாய் திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்கிறார். அதனால் இவர் பல காலம் சங்குசக்கரங்களின்றியேயிருக்க, அதை ஆதாரமாகக் கொண்டு சிலசைவர்கள் இவ்வெம்பெருமான் முருகனே என்றும் சிவனே என்றும் வாதிட்டனர் : அப்போது ஸ்ரீராமா நுஜர் ஸ்ரீனிவாஸனுக்குத் திருமார்பில் லக்ஷ்மிப்பிராட்டி எழுந்தருளியிருப்பதைக் காட்டி அவன் திருமாலே என்று நிரூபித்து சங்குசக்கரங்களை ஸமர்ப்பித்தார். இது ஸ்ரீராமாநுஜர் வைபவத்தில் கூறப்பட்டுள்ளது.

★ உத்ஸவர் மலையப்பன், மலைக்கினிய நின்ற பெருமாள் என்றழைக்கப்படுகிறார். மூலஸ்தானத்தில் இவரைத் தவிர, சக்ரவர்த்திதிருமகனார். (இராமன்) பிராட்டி (ஸீதை), இளைய பெருமாள் (லக்ஷ்மணன்), கண்ணன், அழகப்பிரானார், வேங்கடத்துறைவார் (போகஸ்ரீனிவாஸர்) ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர்.

★ இங்கு பாய்ந்தோடும் கானாறுகளும், கல்லருவிகளும், பாவனத்தீர்த்தங்களும் எண்ணிலடங்கா. இவைகளில் முதன்மை பெற்றது சுவாமி புஷ்கரிணி தீர்த்தம். இதன் கரையில் வராஹப் பெருமான் தனிக்கோயில் ஒன்று உள்ளது. இது திருவேங்கடத்தான் ஸன்னிதிக்கும் முற்பட்டது என்றும் இவரை தரிசனம் செய்த பிறகே திருவேங்கடவனை தரிசிக்க வேணும் என்றும் சிலர் கூறுவர்.

★ இராமாநுசர் தம் சிறு பிராயத்தில் தம் மாமாவான திருமலை நம்பியிடம் இராமாயணம் கேட்டதலம் இதுவே. பிற் காலத்தில் இராமாநுசர் சொல்படி அவருடைய சீடரான அநந்தாழ்வான் எனும் மகான் நந்தவனம் ஒன்றை அமைத்து ஏரி வெட்டி, எம்பெருமானுக்குப் புஷ்ப கைங்கர்யங்கள் செய்து வந்தார். இராமாநுஜர் வேதார்த்த ஸங்க்ரஹம் எனும் நூலை இத்தலத்தில் தான் அருளிச் செய்தார்.

★ ஸ்ரீ ராமாநுஜரின் அனுமதியுடன் அவருக்கு ஒரு ஸன்னிதியையும் கட்டி அவருடைய விக்ரஹத்தையும் பிர

திஷ்டை செய்துள்ளார் அவருடைய சீடரான அநந்தாழ்வான். மற்ற ஆழ்வாராசாரியர்கள் ஆதிசேஷனின் அம்சமான திருமலை மீது ஏறுவது பாவம் என்று கருதி கீழிருந்தே ஸ்ரீனிவாசனை மங்களாசாஸனம் செய்தபடியால் அவர்களுக்குத் திருமலையில் ஸன்னிதிகள் ஏற்படவில்லை. எனவே ஆதிசேஷாவதாரபூதரான ஸ்ரீ ராமாநுஜர் ஒருவருக்கு மட்டுமே திருமலையில் ஸன்னிதியுள்ளது. அவர் சில விழாக்களில் தனிச்சிறப்புடன் பங்கேற்றார்.

★ வேதாந்தாசாரியார் இத்தலத்தெம்பெருமான் துதியாக தயாசதகம் எனும் தோத்திரத்தை விண்ணப்பித்து தாம் வேதாந்த தேசிகர் என்று விருதுபெற்றதாகத் தெரிவிக்கிறார்

★ ஸ்ரீ மணவாளமாமுனிகள் நியமித்த அஷ்டதிக் கஜங்களில் ஒருவரான பிரதிவாதி பயங்கரம் அண்ணா, திருவேங்கடவன் விஷயமாக ஸுப்ரபாதம் மங்களம் போன்ற பல துதிகள் அருளிச் செய்துள்ளார்.

★ இங்கு நடைபெறும் வழிபாடு வைகானஸ ஆகம விதிப்படி நடைபெறுகிறது. நித்ய கல்யாணம் பச்சைத் தோரணம் என்ற பழமொழியை மெய்ப்பிக்கும்படி நாடோறும் அதிகாலையில் ஸுப்ரபாதம், சுத்தி, தோமலசேவை, அர்ச்சனை, மணி, சாற்றுமுறை, தர்மதரிசனம், (கல்யாண உத்ஸவம், ஆயிரம் கலச அபிஷேகம், வஸந்த உத்ஸவம், திருப்பாவாடை உத்ஸவம்) வெள்ளிக்கிழமை அபிஷேகம், இரவு தோமல சேவை, ஏகாந்தசேவை என்றிப்படி பலபல உத்ஸவங்கள் நாள்முழுவதும் நடக்கின்றன.

★ ஆனிவார ஆஸ்தானம் என்கிற திருவிழா இத்தலத்திற்கே தனிப்பட்ட சிறப்பைத் தருவது. புரட்டாசி மாதம் திருவோண நக்ஷத்திரம் முடிய பத்து நாட்கள் ப்ரஹ்மோத்ஸவம் நடைபெறுகிறது.

★ எம்பெருமானுக்கு அந்தரங்கமாகக் கைங்கர்யம் (பணி) செய்பவர்களில் தலையானவர்கள் ஸ்ரீராமாநுஜரால் நியமிக்கப்பட்ட பெரிய ஜீயர் ஸ்வாமி, மணவாள மாமுனிகளால் நியமிக்கப்பட்ட சின்ன ஜீயர் ஸ்வாமி, ஏகாங்கிகள், அர்ச்சகர்கள் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

★ முன்னொரு காலத்தில் மிகவும் சிறியதாக இருந்த இத்தலம் இப்போது நவநாகரீகப் பட்டணமாகக் காட்சியளிக்கிறது. உலகிலேயே இதுபோன்ற வருட வாரி 15 கோடி ரூபாய் வருமானம் உள்ள கோயில் உலகில் வேறெங்கும் காணக்கிடைக்காது.

★ இங்கு பக்தர்களுக்குத் திருவேங்கடவன் திருமண்காப்பான ஸ்ரீபாதரேணு என்கிற பச்சைக் கற்பூரமும் கஸ்தூரியும், சந்தனமும், லட்டும் மஹாப்ரஸாதமாகும்.

★ திருமலை யடிவாரத்தில் கோவிந்தராஜன் கோயிலும், கோதண்ட ராமர் கோயிலுமிருக்கிறது. (சிதம்பரம்) தில்லைத் திருச்சித்திர கூடத்து கோவிந்தனை இங்கு ஸ்ரீ ராமாநுஜர் பிரதிஷ்டை செய்ததாக குரு பரம்பரை வரலாறு கூறுகிறது. கோவிந்தனுக்கு வைகாசியிலும், ஸ்ரீராமனுக்கு பங்குனியிலும் ப்ரஹ்மோத்ஸவங்களுண்டு. மற்ற வுத்ஸவங்கள் எல்லாம் திருமலையில் நடைபெற்ற பின்பே இங்கு நடைபெறுவது வழக்கம். இந்தக் கோயிலைச் சேர்ந்த ஆழ்வாராசாரியர்கள் ஸன்னிதிகள் கோயிலுக்குள்ளும் வெளியிலும் அமைந்திருக்கின்றன.

★ கோவிந்தன் ஸன்னிதிக்கு இரண்டு மைல் தூரத்தில் திருச்சானூரில் அலர்மேல் மங்கைத் தாயார் தனிக் கோயில் கோபுரம் மாடவீதிகளுடன் திகழ்கிறது. கார்த்திகை மாதம் பஞ்சமி தீர்த்தம் எனும் திருவிழா பல்லாயிரக் கணக்கான பக்தர்களால் புனித நீராடிக் கொண்டாடப் படுவது இத்தலத்தின் விசேஷமாகும்.

★ ஒரே ஒரு முறை கோவிந்தா என்று அழைத்தாலும் அடியார்களின் செடியாய வல்வினைகளைத் தீர்த்தருளும் திருமால் ஸ்ரீநிவாஸன். நாமும் அவ்வாறே அழைத்து உய்வோமாக! ★

# திருமலை - திருப்பதி

வித்வான், ந்யாயசிரோமணி, சொல்வேந்தர், பிள்ளைலோகம்
ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத்துறைவார் ஸ்வாமி

நாயகனாய் நின்ற மலை :- கோயில் திருமலை பெருமாள் கோவில் என்று அடிக்கடி கூறுவதுண்டு. அதில் நடுநாயகமாய் இருப்பது திருமலை. இதனைத்திருவேங்கடமலை, சேஷாத்ரி என்று பல பெயர்களால் குறிப்பிடுவதுண்டு. பகவான் ஒரு மலையாக இருக்கிறான்; அவனைச் சிறிதும் விடாமல் தொண்டு செய்யும் திருவனந்தாழ்வான் (ஆதிசேஷன்) ஒரு மலையாக இருக்கிறான். கண்ணன் கோவர்த்தன மலையாகவே இருந்து கோவர்த்தனகிரி பூஜையை ஏற்றுக்கொண்டான். திருவனந்தாழ்வான் திருமலையாக இருந்துகொண்டு ஸ்ரீநிவாஸனைத் தாங்கிநிற்கிறான். 'வேங்கடமே வேங்கடமே' என்றாலே புண்ணியம். வேங்கட மலையைக் கண்டால் பாவம் தொலையும். அதன்மேல் ஏறிச்சென்று ஸ்ரீநிவாஸனை ஸேவித்துவிட்டால் அதுவே பிறவிப்பயன். அதனாலேயே பெரியோர்கள் திருவேங்கட யாத்திரையை முக்கிய யாத்திரையாகக் கருதினார்கள். பகவானைப் பெற்றிருக்கும் பாக்கியத்தால் திருமலை வானளாவி நிமிர்ந்து நிற்கிறது. 'நானே உயர்ந்த பொருள்' என்று தன்னை உணர்த்திக் கொண்டு ஸ்ரீநிவாஸன் அங்கு உறைகிறான். அவன் திருவுக்கும் திருவாகிய செல்வன்! பாரத நாட்டிற்கே தலைமை தாங்கி விளங்குகிறது திருமலை! அனைவரையும் அழைத்துக் காப்பாற்றுகிறது! அதுவே நாயகனாய் நின்ற மலையரையன்.

முழங்கால் முடிச்சு :- ஆழ்வார்கள் திருமலையில் ஏறவும் கூசி நின்றார்கள். திருமலையில் திருவடி படுவதையும் அபசாரமாகக் கருதினார்கள். அதனால் மலையின் அடிவாரத்திலிருந்தே திருவேங்கடமுடையானையும் திருமலையையும் மங்களாசாஸனம் செய்துள்ளார்

கள். ஸ்ரீராமாநுஜர் (எம்பெருமானார்) ஒருவரே மலைமீது ஏறிச்சென்றுள்ளார். மூன்று முறை சென்றுள்ளார் என்று திருமலையொழுகு கூறுகிறது. திருவடிகளை மண்டியிட்டுக் கொண்டு முழங்காலால் சென்றதாகக் கூறப்படுகிறது. அது எவ்வாறுயினும் ஆகுக. ஆனால் இப்போதும் மலைமீது ஏறிச் செல்பவர்கள் (கால்நடையாகவே செல்லுகிறவர்கள்) மலையில் செங்குத்தாக ஏறும் பகுதியை முழங்கால் முடிச்சு என்றே கூறுகிறார்கள். மலைமீது வண்டிகளில் செல்லுதல் அநுசிதம் என்றே பெரியோர்கள் கூறுகின்றனர். தன்னை ஸேவிப்பதற்கு யாராவது நடந்துவந்தால் பகவான் பெரிதும் மகிழ்ந்து ஆ! ஆ! என்று அருளுகிறான் என்று பல நூல்கள் கூறுகின்றன.

வருஷ தீர்த்தம் :- ஒரு வருஷத்திற்கு 365 நாட்கள். வேங்கடாசலத்தில் சுமார் 365 தீர்த்தங்கள் இருப்பதாகப் புராணம் கூறுகிறது. ஆனால், அவை கண்ணுக்குப் புலப் படாத இடங்களில் இருக்கின்றன. அவற்றுள் சில தீர்த்தங்களே இப்போது பெருமையுடன் விளங்குகின்றன. பக்தர்கள் இந்தத் தீர்த்தங்களுக்குச் செல்லுகிறார்கள். வைகுண்ட தீர்த்தம், துருவ தீர்த்தம், ஜாபாலி தீர்த்தம், பாண்டவ தீர்த் தம், இராமகிருஷ்ண தீர்த்தம், சேஷ தீர்த்தம், சக்ர தீர்த்தம், தும்புரு தீர்த்தம், ஆகாச கங்கை, பாபவிநாசம், குமார தாரை தீர்த்தம் ஆகியவை பெருமை பெற்றவை. திருமலையில் இருக் கும் புஷ்கரிணிக்கு ஸ்வாமி புஷ்கரிணி என்று பெயர். பக வானை ஸேவிக்கச் செல்லும் அனைவரும் அக்குளத்தில்தான் நீராட வேண்டும். அந்த முந்நூற்று அறுபத்தைந்து தீர்த்தங் களும், வைகுண்ட த்வாதசியன்று ஸ்வாமி புஷ்கரிணியில் ஒன்று சேருகின்றன என்பது ஐதிஹ்யம். அன்றையதினம் அக்குளத் தில் நீராடுகிறவர்கள் முந்நூற்று அறுபத்தைந்து தீர்த்தங்களி லும் நீராடிய பயன்களை பெறுவர். 365 தீர்த்தங்களையும் கொண்ட ஸ்வாமி புஷ்கரிணியை வர்ஷ தீர்த்தம் என்றும் சொல்லலாமன்றோ!

வராஹ க்ஷேத்திரம் :- வராஹப் பெருமான் கோயில் கொண்டுள்ள இடங்களுள் சில இடங்களை நமக்குத் தெரியும். திருக்கடல் மல்லை, திருவிடவெந்தை, ஸ்ரீமுஷ்ணம் ஆகிய இடங்களில் வராஹப் பெருமான் எழுந்தருளி இருக்கிறார். திருமலையை வராஹக்ஷேத்திரம் என்றே கூறுவார்கள். ஸ்வாமி புஷ்கரிணிக்கு வடகரையில் வராஹப் பெருமான் எழுந்தருளி இருக்கிறார். திருமலையில் உள்ள திருவேங்கடமுடையான் ஸன்னிதி முதன் முதலில் தொண்டைமான் சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது என்று புராணம் கூறுகிறது. ஆனால் ஸன்னிதி சிறிய அளவில் இருந்தது. அங்கு செல்லவும் வசதி இல்லாமல் இருந்தது. ஸ்ரீராமானுஜர் திருமலைக்கு எழுந்தருளி ஸன்னிதியை விசாலமாக்கித் திருவீதிகளையும் அமைத்துத் திருவேங்கடமுடையானின் பிரம்மோத்ஸவத்தை திருமலையிலேயே நடத்துவதற்கு ஏற்பாடு செய்தார் என்று மிகப் பழைய வரலாறு ஒன்று கூறப்படுகிறது.

ரக்ஷகனைக் காத்த ஸம்ரக்ஷகன் :- ஒரு கால் திருமலையில் சைவ வைணவப் பூசல் தோன்றி வளர்ந்தது. ஸ்ரீமந்நாராயணனுக்குச் சில அடையாளங்கள் உண்டு. திருவாழி திருச்சங்கு, திருத்துழாய்மாலை, கௌஸ்துபம், பீதாம்பரம் ஆகியவை ஸ்ரீமந்நாராயணனைக் காட்டும் அடையாளங்களாகும். மஹாலக்ஷ்மியின் திருவுருவத்தோடு கூடிய திருமார்பை உடையவன் ஸ்ரீமந்நாராயணனே. ஸ்ரீநிவாஸன் அலர்மேல் மங்கையுறை மார்பனாக இருந்தும், சமூகவலிமையைக் கொண்டு ஸ்ரீநிவாஸனை வேறு தெய்வமாகப் பிரசாரம் செய்து சைவர்கள் பூசல் விளைவித்தனர். அப்போது நம் இராமானுசன் ஸ்ரீநிவாஸனிடம் சென்று 'எம்பெருமானே! திருவாழி திருச்சங்கை அணிந்து

கொண்டு, நீ ஸ்ரீமந் நாராயணன், ஸ்ரீ நிவாஸன் என்பதைப் பூசல் வல்லார்களுக்கு உணர்த்தவேண்டும் என்று பிரார்த்தித்தார். எம்பெருமானும் அவ்வாறே செய்து பூசலை முடித்திட்டான். அதுமுதல் எம்பெருமானரை 'அப்பனுக்கு சங்காழி அளித்த தேவர்' என்று கூறுகின்றனர். ரக்ஷகனான பகவானையும் ஸம்ரக்ஷித்து, அவனைக் கொண்டு நம்மை ரக்ஷிக்கும்படி செய்திருக்கிறார் ஸ்ரீராமாநுஜர்.

நாம் எம்பெருமானை எவ்வாறு சரண் புகவேண்டும் என்பதை, நம்மாழ்வார் திருவேங்கட முடையானிடத்தில் சரணாகதியைச் செய்து காட்டி இருக்கிறார். பிராட்டியின் புருஷகாரத்தினாலேயே எம்பெருமானின் திருவருளைப் பெற முடியும் என்று அறுதியிட்டு சரணாகதி லக்ஷணத்தையும் 'புகலொன்றில்லா அடியேன்' என்பதால் ஒருவாறு வெளியிட்டுள்ளார். மநஸ்ஸாலோ, வாக்கினாலோ, சரீரத்தினாலோ சரணாகதியைச் செய்யலாம். ஆதலால் நாம்,

**அகலகில்லேனிறையுமென்று அலர் மேல் மங்கையுறைமார்பா!**
**நிகரில் புகழாய்! உலகம் மூன்றுடையாய் என்னையாள்வானே!**
**நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே!**
**'புகலொன்றில்லாவடியேன் உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே!**

**திருவாய்மொழி (6-10-10)**

என்று சொன்னாலே போதும் கன்றிழந்த தலைநாகு தோல் கன்றுக்கு இரங்குமாபோலே திருவேங்கடவன் இரக்கத்தோடு நம்மை அளித்துக் காப்பான்.

# தொண்டரடிப் பொடி ஆழ்வார்

சோழ நாட்டில் திருமண்டங்குடி என்ற சிற்றூரில் மார்கழி மாதம் கேட்டை நக்ஷத்திரத்தன்று முன்சடுமிச் சோழியர் குலத்திலே அவதரித்தார் இவர். இவருக்கு விப்ரநாராயணர் என்று பெயரிட்டனர் இவரது பெற்றோர். உரிய காலங்களில் முறைப்படி வேதங்களையும் சாத்திரங்களையும் கற்றுத் தேர்ந்தார். திருமணத்தில் விருப்பம் அற்றவராய், ஸ்ரீரங்கம் சென்று சேர்ந்து அங்கு ஒரு நந்தவனம் அமைத்து ஸ்ரீரங்கநாதனுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார்.

ஸ்ரீரங்கத்திற்கு வடக்கிலுள்ள உத்தமர் கோயிலில் தேவதேவி என்றொரு தாஸி அழகில் சிறந்தவள். அவள் சோழவரசனது அரசவையில் ஆடிப்பாடி, அரசனை மயக்கிப் பரிசுகள் பலவும் பெற்றாள். திரும்பி வரும் போது விப்ரநாராயணரது நந்தவனத்தைக் கண்டாள். அங்கே விப்ரநாராயணரையும் கண்டு, அவரையும் தன் அழகால் மயக்க முயன்றாள் அப்போது தேவதேவியுடனிருந்த அவளது தமக்கை, விப்ரநாராயணர் இறைவனின் உண்மையான பக்தர் என்றும், அவர் இவ்வுலக ஆசைகளை விட்டவர் என்றால், அதனால் அவரை தேவதேவியால் மயக்க முடியாது என்றும் கூறினாள். சினமுற்ற தேவதேவி தன் தமக்கையுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டாள். அதாவது, தேவதேவி விப்ரநாராயணரை மயக்கி விட்டால் தேவதேவிக்கு அவள் தமக்கை அடிமை ஆகிவிடவேண்டும்; மயக்க முடியாவிட்டால் தேவதேவி தன் தமக்கைக்கு அடிமையாகிவிடவேண்டும் என்பதே.

தேவதேவி தன் ஆபரணங்களைக் களைந்து விட்டு எளிய காவியுடையுடன் ஒரு துறவிபோல் விப்ரநாராயணரது ஆச்ரமத்திற்குள் நுழைந்தாள். விப்ரநாராயணரது கால்களைப் பிடித்துக்கொண்டு தனக்கு அடைக்கலம் தருமாறு வேண்டினாள். தான் பிறப்பால்

ஒரு தாஸி என்றும் தனக்கு அத்தொழிலில் விருப்பம் இல்லை என்றும் இறைவனுக்குத் தொண்டு செய்யவே தன் மனம் விரும்புகின்றது என்றும் (பொய்) கூறினாள். அவளது பொய் புரைகளை நம்பிய விப்ரநாராயணரும், மாலை தொடுத்தல் செடிகளுக்கு நீர் பெய்தல், சோலையைப் பாதுகாத்தல் முதலிய எளிய கைங்கர்யங்களை அவளிடம் ஒப்படைத்தார்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள் பெருமழையில் நனைந்து கொண்டிருந்த தேவதேவியைக் கண்ணுற்றவர் அவளுக்கு தன் குடிலிலேயே தங்க இடமளித்தார். அப்போது அவரை நெருங்கி மயக்கி தன்வசப்படுத்திக் கொண்டாள் தேவதேவி. அன்றிலிருந்து விப்ரநாராயணரும் தேவதேவிடம் பித்துப்பிடித்தவர் போல் காதல் வயப்பட்டார். தமது கைங்கர்யத்தையும் மறந்தார். அவரிடமிருந்த பொருள் கரைந்ததும் தேவதேவி அவரை விட்டுப் பிரிந்து ஒதுங்கினாள். அவளைப்பிரிந்து வாழ முடியாமல் தவித்தார் விப்ரநாராயணர். தன் பக்தனின் இந்நிலைக்கு இரக்கப்பட்ட அரங்கநாதன் மனிதவடிவம் கொண்டு தன் கோயிலிலிருந்து பொன்வட்டிலை எடுத்துக்கொண்டு போய் தேவதேவியிடம் விப்ர நாராயணர் கொடுத்ததாகக் கொடுத்து விட்டார். தேவதேவியும் விப்ரநாராயணரை மீண்டும் விரும்பலானாள்.

மறுநாள் பொன்வட்டில் களவு போனது அரசனுக்குத் தெரியவந்தது. விசாரணையின் போது அவ்வட்டில் தேவதேவியின் மாளிகையில் உள்ளதென அவளது வீட்டு வேலைக்காரி ஒருத்தி தெரிவித்தாள். அரசனும் தேவதேவியை அழைத்து விசாரிக்க, அவள் அவ்வட்டிலை தனக்கு விப்ரநாராயணர் கொடுத்ததாக அவரது வேலைக்காரன் ஒருவன் கொடுத்தான் என்றாள். அரசன் தேவதேவிக்கு அபராதம் விதித்து விப்ரநாராயணரைச் சிறையில் இட்டான். மீண்டும் சோதனைக்குள்ளான பக்தனின் நிலை கண்டு இரங்கிய ஸ்ரீரங்கநாதன் அன்றிரவு அரசனின் கனவில் தோன்றி அவனுக்கு உண்மையை உணர்த்தினார். தாஸியிடம் காதல் கொண்ட கருமம் நிர்வதற்காகவே விப்ரநாராயண

ருக்கு இச்சோதனையை அளித்ததாகவும் கூறினர். உண்மையை உணர்ந்த அரசனும் அவரை விடுதலை செய்தான்.

அந்தணராய்ப் பிறந்தும், தாஸியிடம் காதல் கொண்டு, எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதையும் மறந்து விட்டதற்காக மிகவும் வருந்தினர் விப்ரநாராயணர். அதற்கு ப்ராயச்சித்தம் செய்ய விரும்பி பெரியோர்களது யோசனையைக் கேட்டார். அவர்களும் எம்பெருமானுடைய அடியார்க்கு அடியனாகி அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை உட்கொள்ளுதலே சிறந்த பரிகாரம் என்று கூறினர். அவ்வாறே செய்து தன் பாவத்தைப் போக்கினர் விப்ரநாராயணர்.

அன்று முதல் இறைவனுடைய தொண்டர்க்கெல்லாம் தொண்டராகி அவர்களுடைய திருவடிகளில் நிகழும் துகளாக (தூசாக)வே தம்மைக் கருதினர். அதனால் தொண்டர் அடிப்பொடி என்ற பெயரும் பெற்றார்.

பிறகு அரங்கன் மேல் தனக்குள்ள பக்தியை பல பாசுரங்களால் வெளியிட்டார். திருப்பள்ளி யெழுச்சி (10 பாசுரங்கள்) திருமாலை (45 பாசுரங்கள்) என்ற இரண்டு திவ்யப்ரபந்தங்களே அவை. அவற்றுள்

சூதனாய்க் கள்வனாகி தூர்த்தரோடிசைந்த காலம்
மாதரார் கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்து வேனை
போதரே என்று சொல்லிப் புந்தியில்புகுந்து, தன்பால்
ஆதரம் பெருக வைத்த அழகனூர் அரங்க மன்றே

என்ற திருமாலைப்பாசுரம் அவருடைய வரலாற்றைத் தெளிவாக வுணர்த்தும். ஒரு பதிவ்ரதையைப்போல் இவர் ஸ்ரீரங்கநாதனைப் பற்றி மட்டுமே பாசுரங்கள் பாடியுள்ளார். வேறு திவ்ய தேசத்து எம்பெருமான்களைப் பாடவில்லை. இவ்வாறு அரங்கனுக்குத் தொண்டு பூண்டு ஒழுகிய இவர் இவ்வுலகில் 105 வருஷங்கள் வாழ்ந்தருளினர்.

★

# பகவானின் விரோதி

## நப்பின்னை, பத்தாம் வகுப்பு

### காட்சி I

(வனத்தில் பாண்டவர்களின் ஆலோசனை)

(குரல்) — அறம் வளர்க! வாய்மை வெல்க! பண்புடன் விளங்கும் பாண்டவர் வாழ்க! தன்னலம் கருதா தருமன் வாழ்க! அருங்கலை வலவன் அருச்சுனன் வாழ்க! விண்ணவர் வணங்கும் வீமன் வாழ்க! நன்மையே நாடும் நகுலன் வாழ்க! சத்திய மூர்த்தியாம் சகதேவன் வாழ்க!

(தருமன் முதலானோர் வருதல்)

தரு:— அருச்சுனா! விதியின் வலிமையை என்னென்பது! நாம் முன்பு இருந்த இருப்பென்ன! இப்போது வாழும் வாழ்வென்ன! நாடறிய வாழ்வதும் நாட்டார் அறியாதபடி மறைந்து வாழ்வதும் ஒன்றாகுமா?

'பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று'

என்றனர் பெரியோர்! ஊஹும் (பெருமூச்சு) மறக்கவே முடியவில்லை! துரியோதனன் நம்மை வஞ்சித்துவிட்டான். எத்தனை நாட்கள்தான் இவ்வாறு இருப்பது? தருமம் வெல்லுமா? நம் வாழ்வு மலருமா?....முடியாது! இனி பொறுக்கவேமுடியாது அருச்சுனா! இன்று எதாவது ஒரு முடிவு செய்தாக வேண்டும். என் அறிவுதான் கலங்கியது என்றால் உன் வில்லின் வலிமையுமா குன்றியது?

அரு:— (விரைவாக எழுந்திருந்து) அண்ணா! உமது பொறுமையையும் வீரத்தையும் தூண்டும் துரியோதனனைத்

துவிடு பொடியாக்குவேன். உத்தரவு கொடுங்கள்! ஒரு கணத்தில் காண்டீபத்தின் வலிமையை உலகறியச் செய்கிறேன். உதவாத காலமும் நமக்கு உதவும்!

வீமன் :— (கதையைத் தரையில் ஓங்கியடித்து) அருச்சுனு போருக்குக் கிளம்பு, அன்றே அழித்திருப்பேன் பகைவரை! 'பொறு, பொறு' என்றான் அண்ணன் அவனை நம்பிப் பயனில்லை. என் கையில் இருக்கும் கதை பகைவரின் இரத்தத்தை சுவைக்க விரும்புகிறது அப்போது அவைக் களத்தில் அறிவாளிகள் அமர்ந்திருந்தார்களே! என்ன செய்தார்கள்?

தரு :— பொறுமையை மேற்கொண்டிருந்தார்கள்!

வீமன் :— பொறுமை! நீதிக்குப் புறம்பாக நடக்கும்போது பொறுமை! அழகும் அடக்கமும் கொண்ட திரௌபதியை அவமதித்தபோது பொறுமை! இனிப் பொறுக்க இயலாது! அண்ணன் அறிவுரையும் வேண்டா; இதோ புறப்படுகிறேன் போருக்கு!

தரு :— வீரனே! கோபம் கொள்ளாதே. காலமெல்லாம் காத்திருந்தோம்! நன்மையே விளையும். தருமனை அண்ணனாகப் பெற்றவர்க்கும் புகழுக்குக் குறைவுண்டோ? தெளிந்து செயல்படுக

சக :— அறநெறி வழுவாத அண்ணு! நாம் துன்பமடைந்த போதெல்லாம் நமக்குக் கைகொடுத்து உதவியவன் கண்ணன்! அவன் நம்பக்கம் இல்லாமலா போய்விட்டான். இனி செய்வதைக் குறித்து அவனோடு கலந்து ஆலோசனை செய்யலாமே! அவனருளன்றி நாம் எவ்வாறு பிழைக்க முடியும்?

தரு :— ஆம்! சகதேவனின் சொல்லும் சிந்திக்கத்தக்கதே! அப்படியே செய்வோம்.

## II

(தனிமையில் திரௌபதி)

பாட்டு :— எப்போ வருவானோ! எங்கள் துயர்தீர்க்கக் கண்ணன் எப்போ வருவானோ!

குரல் :— "திரௌபதி! வருந்தாதே! உன் துயர் நீங்கும்"

தி :— யார் கண்ணனா! வருக! நீயல்லவோ காக்கும் கடவுள்! அழைத்தவுடன் வந்தனையே!

க :— நான் எங்கிருந்து வரவேண்டும்? அடியார்களின் உள்ளத் திலன்றோ நிலையாக இருக்கிறேன்!

தி :— அவ்வாறு இருந்தும் என்துயரை ஏன் தீர்க்கவில்லை? அடியார் படு துயரெல்லாம் நிலந்தரம் செய்பவனல்லவா நீ! என் துன்பத்திற்கு மாற்றே இல்லையா? கண்ணா! இதுவும் உன்னருளா? எம் வாழ்வைக் கெடுத்த பகைவரை அழித்தா லன்றி என் உள்ளம் அமைதி பெறாது. நீயே என் துன் பத்தை நீக்க வேண்டும் வேறு கதியே இல்லை!

க :— திரௌபதி! வருந்தாதே! பகைவர்களை அழித்து, பாண்டவர்களுக்கு மறுவாழ்வும் தந்து, உன் துன்பம் நீக்கி என் கடமையை விரைவிலேயே முடிக்கிறேன். பூமியே வெடித்தாலும், வானம் தாழ்ந்தாலும், கடலே வற்றிப் போனாலும், திரௌபதி! என் வார்த்தை பொய்யாகாது காண்!

(தருமன் முதலானோர் வருகின்றனர்)

(தருமன் வணங்குகிறான்)

க :— வாழ்க நின் கொற்றம்! வாய்மை வெல்லுக!

த :— எண்ணியவுடனே எங்கும் தோன்றும் பரம் பொருளே! உன் அருளைக் காட்டிலும் பெரியது ஒன்றுண்டா? துரியோதனன் எங்கள் நாட்டைப் பற்றிக்கொண்டான். பல ஆண்டுகள் காயும் கனியும் உண்டு காட்டில் வாழ்ந்தோம். துரியோதனனின் மனம் மாறியதா என்றும் தெரியவில்லை! ஒரு தூதுவரைக் கொண்டு அவன் கருத்தறியலாம் என்றிருந்தேன். நீ வந்து நின்றாய்! எங்களுக்குத் தாயும், தந்தையும், நண்பனும் நீயே! உன்னையே தூதுவராக அனுப்ப விரும்புகிறேன்.

க :— தருமனே! நான் அடியார்க்கு அடியன்! அவர்களுக்குத் தொண்டு செய்வது என் கடமை! நான் கண்ணனாகப் பிறந்த பயனும் இதுவேதான்! ஆம்! அங்கு சென்று என்ன கூறவேண்டும்!

த :— எங்கள் நிலை உனக்குத் தெரியாதா? கண்ணா! எங்களுடைய நாட்டை எங்களுக்குக் கொடுக்கச் சொல்.

க :— அருச்சுனா! உன் விருப்பமென்ன?

அ :— பாவையின் துயரமும் நீங்க வேண்டும்! நாடு கொடுக்க மறுத்தால் போர் புரிய வேண்டியதுதான!

க :— வலிமையிற் சிறந்த வீமனே! நீ சொல்லுவது என்ன?

வீ :— இப்போதே போருக்குச் செல்லலாம். தோகையன்ன பாஞ்சாலிக்குத் துயர் தந்த துரியோதனனின் தொடையைப் பிளப்பேன். இக்கதையால் அவன் கதையை முடிப்பேன்.

க :— நீதி உணர்ந்த நகுலனே! உன் விருப்பமும் இதுதானே!

ந :— நாட்டைக் கொடுத்துவிட்டு அவனும் வாழட்டும்; நாமும் வாழ்வோம்!

க :— சாத்திரமறிந்த சகாதேவா! உன் நிலை என்ன?

ச :— உனக்கு நான் கூறவேண்டியது என்ன இருக்கிறது? நீ விரும்பினால் அனைவரும் துன்பம் நீங்கி இருக்கலாமே; 'போர் ஏற்பட வேண்டாம்' என்று நீ நினைத்தால் அதுவே போதும்! எல்லாம் சரியாகிவிடும்!

க :— அப்படியானால் திரௌபதியின் கூளுரை என்னவாகும்?

ச :— உன் திருவுள்ளம்!

க :— மகிழ்ச்சி! நான் பாண்டவர் தூதனாகச் செல்வேன். விடை பெறுகிறேன்.

## III

(துரியோதனன் சபை)

து :— ஆயர்குல நண்பா! வருக! ஏது! இவ்வளவு தூரம் வந்து விட்டாய்! நீ விருந்தாக வரமாட்டாயே!

க :— செல்வப் பெருமிதம் கொண்ட கௌரவா! உண்மை! நான் விருந்தாகவே வரவில்லை.

து :— அஃதிருக்கட்டும்! நீ எப்போது வந்தாய்?

க :— நேற்றே வந்து விட்டேன்.

து :— எங்கு தங்கியிருந்தாய்?

க :— 'ஒருநாள் காண வாராயே' என்று விதுரர் அன்புடன் அழைத்தார். அவர் மாளிகையில்தான் தங்கினேன்.

து :— ஹ! ஹ! ஹ! விதுரன் குடிசையிலா! உணவு?

க :— சபரி கொடுத்த உணவு போல் அன்போடு அவர் உணவு இட்டார் உண்டேன்!

து :— பேரரசனான நான் இருக்கிறேன். அறிவில் சிறந்த பீஷ்மர் துரோணர் முதலானோர் இருக்கின்றனர். அப்படி இருக்கத் தாழ்ந்தவன் வீட்டில் உண்பானேன்?

க :— பகைவன் வீட்டில் உண்ணவும் கூடாது; பகைவரை நம் வீட்டில் உண்ணச் செய்யவும் கூடாது என்பது அரசநீதியாயிற்றே; அதனால்தான் நான் உன் வீட்டில் உண்ண வரவில்லை.

து :— அப்படியென்றால்...?

க :— நீ எனக்குப் பகைவன் என்று அர்த்தம்.

து :— உனக்கு நான் ஒரு தீங்கும் செய்யவில்லையே? ஏன் என்னை உன் பகைவனுகக் கருதுகிறாய்?

க :— எனக்கென்று தனியாகப் பகைவர்கள் கிடையாது. என் அடியவர்களை யார் துன்புறுத்துகிறார்களோ அவர்களே எனக்குப் பகைவர். பாண்டவர்கள் என் உயிர்போன்றவர்கள். அவர்களை நீ வஞ்சிக்கிறாய். எனவே நீ எனக்குப் பகைவனே.

(திரை)

குரல்: ஆம்! இறைவனின் உள்ளக் கருத்து இங்கே வெளிப்பட்டு விட்டது. வேண்டுதல் வேண்டாமை இல்லாத இறைவனும் ஒரு சார்பாகத் தன் தீர்ப்பை வழங்கிவிட்டான். அவனடியார்களை விரோதிப்பவர் அவனுக்கே விரோதிகள் என்று கூறிவிட்டான். அதை உணர்ந்து இறைவன் அடியார்களை நேசியுங்கள்!

---

द्विषदन्नं नभोक्तव्यं द्विषन्तं नैव भोजयेत् ।
पाण्डवान् द्विषसे राजन् मम प्राणा हि पाण्डवाः ॥

என்ற மகாபாரத சுலோகத்தின் விளக்கமே இந்த நாடகம்.

# பகவத் கீதாஸாரம்

ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்
**அண்ணங்கராசாரியர் ஸ்வாமி**

பகவான் ஸ்ரீ ராமாவதாரஞ் செய்து * தசவர்ஷஸஹஸ்ராணி தசவர்ஷசதாநி ச, ராமோ ராஜ்யமுபாஸித்வா* என்றபடி பதினோராயிரமாண்டு இந்நிலவுலகில் வாழ்ந்திருந்தும் ஸம்ஸாரிசேதநோஜ்ஜீவநார்த்தமாக ஒரு சாஸ்த்ரமும் இட்டருளவில்லை; தன்னடிச் சோதிக்கு எழுந்தருளின பிறகு திருவுள்ளத்தில் இக்குறை மிகவும் தோன்றிற்று. அப்போதே திடமாக ஸங்கல்பம் செய்து கொண்டான்—அடுத்தபடி மண்ணுலகில் அவதாரம் செய்யும் போது மிகச் சிறந்ததொரு சாஸ்த்ரத்தை அவதரிப்பித்தே தீருவேனென்று. சாஸ்த்ரத்தை அவதரிப்பித்தலென்றால் ஓலைப்புறத்திலே எழுதிவைப்பதன்று.



அப்படியெழுதி வைப்பதில் ரஸமில்லை. ஒரு உத்தமாதிகாரிக்குத் தன் திருவாக்காலே நேராக உபதேசித்து அம்முகத்தாலே உலகில் பரவ வைக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றியிருந்தான். ஸ்ரீவசநபூஷணத்தில் "ஜிதேந்த்ரியரில் தலைவனாய் ஆஸ்திகாக்ரேஸரனாய் *கேசவஸ்யாத்மாவென்று க்ருஷ்ணனுக்கு தாரகனாயிருக்கிற அர்ஜுநனுக்கு" என்று பிள்ளை லோகாசார்யர் புகழும் படியான பெருமைவாய்ந்த அர்ஜுனனையே உபதேசபாத்ரமாகத் திருவுள்ளம் பற்றினான் கண்ணபிரான். அரும்பெரும் பொருள்களை சிஷ்யனானவனுக்கு உபதேசிக்க

லாமே யல்லது மற்றையோர்க்கு உபதேசிக்கத் தகாது. அர்ஜுனன் இப்போது நண்பனென்னும் முறையிலுள்ளானே யன்றி சிஷ்யனென்னும் முறையிலில்லை. "அதிபரிசயாத வஜ்ஞா ஸந்ததகமநாத் அநாதரோ பவதி, மலயே பில்ல புரந்த்ரீ சந்தநதருகாஷ்டமிந்தநம் குருதே." என்று ஒரு ஸுபாஷிதமுண்டே. மலயபர்வதத்தில் வாழும் குறத்திகள் சந்தனக்கட்டைகளை விறகாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்களாம். எதனாலே? அவ்விடத்தில் சந்தனகாஷ்டங்கள் மலிந்துகிடக்கின்றன. அவற்றோடே அவர்களுக்குப் பரிசயம் அதிகம். அதிக பரிசயமுள்ளவிடத்தில் அவஜ்ஞை தோன்றுவது இயல்வு; ஆகவே அவர்கள் சந்தனக்கட்டைகளின் பெருமையையுணராமல் அவற்றை யிட்டுச் சமையல் செய்வதும் குளிர்காய்வதுமாயிருக்கிறார்கள். அதுபோல, கண்ணன் பக்கலில் அதிக பரிசயமுள்ள அர்ஜுனனுக்கு சிஷ்யத்வமிருக்க ப்ரஸக்தியில்லையன்றோ. சிஷ்யக்ருத்தி செய்யாதவனுக்கு உபதேசிக்கக் கூடாதாதலால் இவ்வர்ஜுனனை எப்படியாவது சிஷ்யனுக்கிக் கொண்டு இவனுக்கே கீதாசாஸ்த்ரத்தை யுபதேசிக்க வேணுமென்று திருவுள்ளம் பற்றினான் கண்ணபிரான். "கண்ணபிரானே! உனக்கு நான் சிஷ்யனாயிருக்கின்றேன், எனக்குத் தத்வோபதேசம் செய்தருளவேணும்" என்று ப்ரார்த்திக்கும்படியாக அர்ஜுனனைச் செய்து பிறகு அவனுக்கு உபதேசிக்கவேணும். சிஷ்யத்வமென்பது எளிதாக உண்டாய் விடுமோ? "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்...தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்" இத்யாதியுபநிஷத்தின்படி நிர்வேதமுண்டானாலல்லது சிஷ்யத்வ முண்டாக மாட்டாதாகையாலே அர்ஜுனனுக்கு சிஷ்யத்வ ப்ராப்திக்கு உடலாக நிர்வேதமுண்டாக வேண்டியது அவசியமாயிற்று; அந்த நிர்வேதத்தை யுண்டாக்குவதற்கு ஸமயமெதிர்பார்த்திருந்தான் கண்ணபிரான்.

இப்பெருமான் ஸந்திபண்ணி வைப்பதாகப் புகுந்து, முடிவில் போர் செய்வதையே திடப்படுத்திக் கொண்டு, ஸமயத்தில் கீதாசாஸ்த்ரத்தை யுபதேசிக்க இடம் பெறுவதற்காக

அர்ஜுநனோடு ஸாமாநாதிகரண்யம் (சேர்த்தி) ஸித்திக்கும் பொருட்டு இவனுடைய தேரில் இருப்புப் பெறுவதற்குத் தேர்ப் பாகனுயிருக்க இசைந்து அவனோடும் அவனுடையாரோடுங் கூட குருக்ஷேத்திரம் வந்து சேர்ந்து யுத்தத்தைத் தொடங்கு வதற்கு முன்னே பந்துக்களைக் கண்டு மோஹிப்ப தென்ன, அத ளுல் சோக விஷாதங்களை யடைவதென்ன ஆகிய இவற்றை யுண்டாக்கி, ஆக இவ்வளவால் சிஷ்யத்வத்திற்கு அங்கமான நிர்வேதத்தை யுண்டாக்குவதாகத் திருவுள்ளம்பற்றி மேலே பத்தாவது அத்யாயத்தில் *அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்தஸ் ஸர்வம் ப்ரவர்த்ததே* என்று தானே யருளிச் செய்கிறபடியே தனக்கு அஸாதாரணமாக விருக்கும் சக்தியினுல்–இப்போது போர் புரிய வந்து நிற்கும் உற்ருருறவினர்களைப் பார்க்கவேணு மென்பதோ ராசையை அர்ஜுனனுக்கு உண்டு பண்ணிஞனு யிற்று. திருவாய் மொழியில் (4—6—1.) *மாயப்போர்த் தேர்ப்பாகனுர்* என்று ஆழ்வார் அருளிச்செய்ததை நினைப் பது. இந்த கீதையிலும் மேலே (15-15.) *ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட: மத்த: ஸ்ம்ருதிர் ஜ்ஞாநம் அபோஹ நஞ்ச* என்பதனுல் ஸூசிக்கப் பட்டுள்ளது.

1. *தர்மக்ஷேத்ரே* இத்யாதியான முதல் சுலோகத்தில் ''யுயுத்ஸவஸ் ஸமவேதா:'' (யுத்தம் செய்ய விரும்பினவர்க ளாய்க் கூடினவர்கள்) என்று கூறின திருதராஷ்டிரன் மேலே (கிம் அகுர்வத?) என்று கேட்டிருக்கக் கூடாது; (யுயுத்ஸவ:) என்றதோடு விரோதிக்குமல்லவா? செய்ய உத்தேசித்த காரி யம் என்னுயிற்று? என்று கேட்க வேணுமேயல்லது 'என்ன செய்தார்கள்?' எனவினவுவது யுக்தமன்றே–என்று தோன்றக் கூடும். (கேண்மின்.) குருக்ஷேத்ரம் மிகச் சிறந்த க்ஷேத்திர மென்பது ப்ரஸித்த மாதலால் [குருக்ஷேத்ரே ஸமவேதா:] என்றாலே போதுமாயிருக்க, குருக்ஷேத்திரத்திற்கு (தர்ம க்ஷேத்ரே) என்று விசேஷண மிட்டிருப்பதை நோக்க வேணும். யுத்தஞ் செய்ய வேணுமென்கிற ருசியோடே சென்ருர்களா யினும் க்ஷேத்ரமாஹாத்மியத்தினுலே அந்த ருசி குலைந்திருக்கக் கூடுமெனறெண்ணி (என்ன செய்தார்கள்?) என்று வினவின

படி என்பர் சிலர். (தர்மக்ஷேத்ரே) என்பதற்கு தாத்பர்ய சந்திரிகையில் "ஸமராத்வரஸமுசிதே இதி பாவ:" என்றருளிச் செய்திருக்கையாலே அத்தோடு இக்கருத்து இணங்காது-என்ன நடந்தது? என வினவினதாகக் கொள்ளலாம்.

இனி [மாமகா: பாண்டவாஸ்சைவ] என்று இருகூறுக்கிக் கூறியிருப்பது கூடாது; பெருந்தன்மையாகப் பேசவேண்டிய கிழவன் [ஆஸ்மாகிநா:—நம்மவர்கள்] என்று சொல்லியிருந்தால் அழகியதாயிருக்கும்; அங்ஙனே சொல்லாதது அவனுடைய மதியீனத்தைக்காட்டும். இந்த மமகாரமே அவன் குடியைக் கெடுத்ததென்க.

சுலோ. 19. [*ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத்*] பெரியதிருமொழியில் 6-7-8 பந்தார் விரலாள் பாஞ்சாலி கூந்தல் முடிக்கப்பாரதத்துக், கந்தார்களிற்றுக் கழன்மன்னர்கலங்கச்சங்கம் வாய்வைத்தான* என்ற பாசுரம் இங்கு நினைக்கத்தக்கது. மேலே பதினொராவது அத்யாயத்தில் முப்பத்து மூன்றும் சுலோகத்தில் *மயைவைதே நிஹதா: பூர்வமேவ* [ஏற்கெனவே இவர்களை நான் கொன்றுவிட்டது] என்று கூறுகின்றான் கண்ணபிரான்; முன்னமே செத்துப்போனவர்களோடா போர் புரியச் சொல்லுகிறான்? (மயா பூர்வமேவ ஏதே நிஹதா ஏவ) என்றதற்குப் பல கருத்துக்களுண்டு. போர்த் தொடக்கத்தில் நான் சங்கு ஊதினபோதே இவர்கள் மாண்டொழிந்தார்களப்பா! என்பதும் இங்கு விவக்ஷிதம், அது தோன்றவே [வ்யதாரயத்] என்றது

சுலோ. 21. [ஸேநயோருபயோர் மத்யே ரதம் ஸ்தாபய மே அச்யுத!*] இவ்விடத்து விரோதத்தை ஆழ்ந்து நோக்க வேணும். அர்ஜுநன் கண்ணபிரானை ஸாமான்ய மநுஷ்யனாக நினைத்திலன். [ரதம் ஸ்தாபய க்ருஷ்ண! மே] என்னாமல் அச்யுத! எனவிளித்துக் கூறுகின்றான். வஸுதேவஸூநு:, நந்தஸூநு:, கோபால:, கோவிந்த:—இத்யாதி நாமங்கள் போன்றதன்று அச்யுத நாமம்; பகவானே! என்றபடி. ஸாரதியான கண்ணனைப் பரமபுருஷனென்று அறிந்துவைத்தும் அவனுடைய ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்யாதி குண

விரோஷங்களில் நம்பிக்கையின்றல் அவனுக்கு பக்தபாரதந்த்ர்யமே வடிவு என்றறுதியிட்டு "உபயோஸ் ஸேநயோர் மத்யே மே ரதம் ஸ்தாபய" என்று அர்ஜுனன் கட்டளையிட்டானாயிற்று. ஆழ்வான் வரதராஜஸ்தவத்தில் *அநந்யாதீநத்வம் தவகில ஜகுர் வைதிககிர: பராதீநம் த்வாம் து ப்ரணதபர தந்த்ரம் மநுமஹே* என்றருளிச்செய்தது காண்க. ஸஹஸ்ர நாமத்தில் *விதீதாத்மாவிதேயாத்மா* என்றவிடத்தில் ஆதி சங்கராசாரியர் (அவிதேயாத்மா) என்று பதம்பிரித்து பாஷ்யமியற்றியிருக்கச் செய்தேயும், பகவத்குணதர்ப்பணத்தில் பட்டர் (விதேயாத்மா) என்றே பதவிபாகம் செய்தருளி விளக்கியிருப்பனவுங்காண்க அர்ஜுனன் இங்ஙனம் கட்டளையிட கண்ணபிரான் 'என்னைக் கட்டளையிட நீ யாரடா!' என்னுதே (24) *ஏவமுக்தோ ஹ்ருஷீகேசோ குடாகேசேந பாரத!, ஸேநயோருபயோர் மத்யே ஸ்தாபயித்வா ரதோத்தமம்* என்னும்படி உடனே அக்கட்டளையை நிறைவேற்றியது, தன் ஆச்ரிதபாரதந்த்ர்யத்தை விசிதமாக்கினபடி. திருவாய்மொழியில் (2-7-4. *தேவும் தன்னையும்* என்றவிடத்து—தேவு என்று தேவத்வமாய் பரத்வத்தைச் சொன்னபடியாய் தன்னையென்று தாமான தன்மையைச் சொன்னபடியாய் (அதாவது) ஆச்ரித பாரதந்தர்யத்தைச் சொன்னபடியாய்—பரத்வ ஸௌலப்யங்களைப் பாடியாட என்று வியாக்கியானம் செய்தருளினர்கள். பரதாழ்வான் சித்திரகூடத் தேறப்போந்து பெருமாளை மீண்டெழுந்தருளப் பிரார்த்திக்க, பெருமான் மறுக்கையில் வஸிஷ்டபகவான் *ஆத்மாநம் நாதிவர்த்தேதா:* என்றான். இங்கே (ஆத்மாநம என்றதற்கு [ஆத்மபூதம் பரதம்] என்று சிலர் பொருள் கூறினர்களாம். (அதுவன்று பொருள்.) நீரான தன்மையாகிறது—ஆச்ரிதபரதந்த்ரராகை; உம்முடைய தம்பி சொன்ன வார்த்தையை மறுத்து நீரான தன்மையை இழவாதே கொள்ளுமென்கிறான்—என்று பட்டருளிச் செய்யும்படியாம். இத்தகைய ஸ்ரீஸூக்திகளுக்கு உயிரூட்டுவதற்காகவன்றோ எம்பெருமான் விபவாவதாரத்தில் இப்படி ஆசரித்துக்காட்டினதும், அர்ச்சாவதாரத்தில் திருமழிசையாழ்வார் போல்வார்க்குப் பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்வதும் விரித்துக் கொள்வதுமாயிருந்ததும். ★

# தொழுது எழு என் மனமே

## R. வேங்கடராமாநுஜ தாஸர்

ஞானக்கனி என்றும் ஞானதேசிகன் என்றும் போற்றப் படுகின்ற நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியில் முதல் பாட்டில் "தொழுது எழு என்மனமே" என்று அருளியுள்ளார். ஆழ்வார் தமது திருவுள்ளத்தைக் குறித்து 'என்னுடைய மனமே! நீ எம்பெருமானைத் தொழுது உய்வாயாக! என்று பணிக்கிறார். எழுதல்—உய்தல்.

ஜீவப் பொருள் என்று முள்ளதாயினும் அது இறைவனை வழிபடும் தன்மையின்றி நின்றால் அதனை இல்லது என்று சாத்திரம் கூறுகின்றது. தன்னைத் தான் அறிந்து பிற பொருள் களையும் அறிந்து கொண்டிருப்பவன் ஆத்மா. அத்தகைய அறிவு இல்லாதவனை இல்லாதவன் என்றும் சாஸ்திரம் கூறு கிறது. இங்கு தன்னைத் தானறிவது என்பது தன்னை உள்ளபடி அறிவது என்பதாகும். தான் உடலைக் காட்டிலும் வேறான வன் என்றும், இறைவனுக்கு உடற்பொருளாய் சேஷமாய்—அடிமையாய் இருப்பவன் என்றும் அறிவது உண்மை அறிவா கும். அங்ஙனம் அறிந்தால் அவன் இறைவனுக்குத் தொண்டு செய்தலல்லது நில்லான். அது கருதியே ஆழ்வார் தொழுது—கைங்கர்யத்தைச் செய்து உய்வாயாக என்கிறார். இங்குத் தொழுகையாகிறது அஞ்சலி செய்கை. அது காயிகமான செயல் வடிவு ஆன திருப்பணி ஆகின்றது. இறைவனுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செயல் கைங்கர்யம் எனப்படும். அதுவும் அவன்மாட்டு அன்போடு செய்தல் என்பதாகும். யாரைத் தொழுது எழல் வேண்டும் என்ற வினவிற்கு "அவன் துயர் அறு சுட ரடி" என்று அருளிச் செய்துள்ளார். அவன்—அவ னுடைய, துயர்—(பிறர்) துன்பத்தை அறு—போக்குகின்ற, சுடர்—விளங்குகின்ற அடி—திருவடிகளை, என்று உடைய வருக்கு முன்புள்ள ஆசார்யர்களும், அவருக்குப் பின்புள்ள ஆசார்யர்களில் அவர் திருவடிகளில் ஆச்ரயித்த திருக்குருகைப்

பின்னாரும், பின்புள்ள வர்திகேசரி அழகிய மணவாள ஜீயரும் பொருள் கூறியுள்ளார்கள். ஆனால் உடையவர் கூறும் பொருள் அவர்கள் கூறும் பொருளைக் காட்டிலும் மிகப் பொருத்தமாகவும் இன்றியமையாததாகவும் காண்கிறது. அதாவது, 'துயரறு சுடரடி' என்ற சொல் வினைத்தொகை யாதலால் துயரறுக்கும் சுடரடி என்றும், துயரறுக்கின்றசுட ரடி என்றும், துயரறுத்தசுடரடி என்றும் முக்காலத்தையும் காட்டி நிற்கும். ஆதலால் முன்புள்ள ஆசாரியர்கள் ஜீவாத் மாக்களுடைய துன்பத்தை போக்குகின்ற திருவடிகள் என்று பொருள் கொண்டார்கள். மேலும் துயர் என்றாலே அது ஜீவாத்மாக்களுக்கே உள்ள ஒன்று என்பது அவர்களுடைய கருத்து. துயர் என்று ஆழ்வார் அருளியுள்ளாரேயன்றி இன்னாருடைய துயர் என்று ஆழ்வார் குறிப்பிடாமையால் அது இறைவனுடைய துயரையுங் காட்டலாம் என்பது உடை யவர் திருவுள்ளம். இறைவனுக்கு வினைவயத்தால் வரும் துயர் இல்லை என்றாலும் தன்னுடையவர்கள் என்ற தொடர்பு பற்றி, மக்கள் படும் துயரால் இறைவனும் துயர் அடைகிறான் என்பது நூல்களின் துணிபு. இந்தத்துயர் இறைவனுக்கு குணமாக அமைகின்றது. இராமபிரானுடைய குணங்களைச் சொல்லி வருகின்ற புடையில் மக்கள் படும் துன்பத்தைக் கண்டு இராம பிரான் மிகவும் துன்பம் அடைவதையும் குணமாகக் கூறி யுள்ளார் ஸ்ரீவால்மீகிமுனிவர். ஆதலால் இறைவனுக்கும் துயர் உண்டு என்று கொள்ளுதல் தகும் என்கிறார் உடையவர். அப்பொழுது அவன்—அவனுடைய துயர்—துன்பம் அறு— இல்லாத, சுடரடி—விளங்கும் திருவடிகளை, தொழுது— சேவித்து எழு— உய்வாயாக, என்பது பொருளாகிறது. அவ னுடைய துயர் நீங்க வேண்டுமானால் மக்கள் துயர் போக வேண்டுமென்பது ஏற்படுகிறது. ஆதலால், ஆழ்வார், தம்மு டைய துயரைப் போக்கியதால் இறைவன் துயர் இல்லாதவ னானான் என்று திருவுள்ளத்திற் கொண்டு "துயரறுசுடரடி தொழுது எழு" என்கிறார் என்று பொருள் அருளிச்செய்தனர் உடையவர். இவ்விருவகைப் பொருள்களில் துயர் என்பதற்குப்

பிறருடைய துயர் என்று பொருள் கொள்ளும் போது பிறர் என்ற ஒரு சொல்லை வருவித்துக் கொள்ளவேண்டும் அருமை யுண்டு. உடையவர் கொள்ளும் பொருளில் அவ்வருமையும் இல்லை. மேலும் எம்பெருமானுடைய கிருபா குணமும் விளங் குகின்றது. ஆழ்வார், தமக்கு எம்பெருமான் செய்த நன்றியை வெளியிட்டதாகவும் ஆகின்றது ஆதலால் ஆழ்வாருடைய துயரைப் போக்கியதால் இறைவன் துயர் இல்லாதவனானான் என்று பொருள் கொள்ளப்பட்டது. என்னுடைய துயரைப் போக்கியதால் இறைவன் துயர் இல்லாதவனாக ஆனான் என்று ஆழ்வார் ஈடுபட்டுப் பேசுகின்றார் என்பது உடையவர் திருவுள் ளம். இறைவன் ஆழ்வாருக்கு மயர்வறமதிநலம் அருளியதால் ஆழ்வார் துயரைத் தீர்த்தவனாகின்றான். துயருக்குக் காரணம் மயர்வு—அறியாமை அதைப் போக்கியது துயரைப் போக்கிய தாக ஆகும் அவன் எத்தகையன் என்ற வினாவிற்கு உயர்வற உயர் நலமுடையவன் என்றும், அயர்வறும் அமரர்கள் அதிபதி என்றும் அருளிச்செய்துள்ளார் என்பது தெளிவு. ★

With compliments from

# J. M. BAXI & CO.

★

2/21, NORTH BEACH ROAD
M A D R A S - 600 001.

Phone : 20016 4 (lines) Post Box 2008
Telex : 626 & 416 Cobles: "BAXICO"

# பன்னிரண்டு
# வைஷ்ணவ லக்ஷணங்கள்
## தி. கோ. ராமாநுஜ தாசர்

1. உலகத்தை நடத்துபவனான கேசவனிடத்தும் அவன் அடியார்களிடத்தும் துவேஷம் இல்லாதவன் **அத்வேஷி** யாவான்.

2. நாராயணனுடைய திருவிழாக்களிலும் ஸ்ரீவைஷ்ண வர் திரளிலும் கலந்து கொள்பவன் **அநுகூலன்** ஆவான்.

3. உச்சரித்தமாத்திரத்தில் பாவங்கள் அனைத்தையும் போக்கும் மாதவனுடைய ஆயிரத்தெட்டு திருநாமங்களில் ஒரு நாமத்தையாவது நினைத்திருக்குமவன் **திருநாமதாரி** யாவான்.

4. வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் கூறியபடி கோவிந்தனின் சின்னமான திருமண்காப்பு, சங்கு சக்கரங்கள், துளசிநளினாக்ஷ மாலைகள் இவைகளை தரித்துக் கொண்டிருப் பவன் **சக்ராங்கி**யாவான்.

5. சிந்தித்த மாத்திரத்தில் மோக்ஷத்தைத் தரக்கூடிய விஷ்ணுவின் அஷ்டாக்ஷர மந்த்ரத்தைப் படிப்பவன் **மந்த்ர பாடி**யாவான்.

6. வேறு தெய்வங்களை வணங்காமல் மதுசூதனிடத்தில் தனது பக்தியை வைத்திருப்பவன் **வைஷ்ணவனுவன்**.

7. வேறு தேவதைகளிடத்தில் பக்தி செய்யும் பந்துக்களை விட்டுவிட்டு, திரிவிக்ரமனிடத்திலேயே இடைவிடாத பக்தி யைச் செய்பவன் **ஸ்ரீவைஷ்ணவனுவான**

8. எல்லாவற்றையும் விட்டுவிட்டு வாமனனையே ப்ரபத்தி பண்ணுபவன் **ப்ரபந்நன்** ஆவான்.

9. ப்ரபத்தியும் வழியல்ல என்று தெரிந்து கொண்டு ஸ்ரீதரனையே உபாயமாகப் பற்றுபவன் ஏகாந்தியாவான்.

10. இவ்வுலக சம்பந்தம் எல்லாவற்றையும் விட்டிட்டு தனக்கும் இருடீகேசனுக்கும் உள்ள தொடர்பை மட்டும் நினைத்து அவன், தன்னைச்சேர்த்துக் கொள்ளும் நாளையே எதிர்பார்த்திருப்பவன் பரம ஏகாந்தியாவான்.

11. அவ்வாறு எம்பெருமான் தொடர்பு மட்டுமன்றி பத்மநாபனடியார்கள் தொடர்பையும் விரும்புமவன் பக்தன் ஆவான்.

12 இவ்வாறு அவன் தாமோதரனையும் அவன் அடியார்களையும் அறிந்து போற்றுபவனாய், ஒரு ஆசார்யனால் அங்கீகரிக்கப்பட்டு அவன் பாகவதனாவான். ★

PHONE : 442407
VUMMIDI
Bangaru Chetty Trust
JEWELLERS and DIAMOND MERCHANTS
vbc
PANAGAL PARK
MADRAS - 600 017

# திருவாய்மொழியும் த்வயமும்

ந்யாய வேதாந்த வித்வான் வாகம்ருதவர்ஷி
**ஸ்ரீ உ. வே. வேளுக்குடி K வரதாசாரியர் ஸ்வாமி**

வேதங்களுக்குள்ளே புருஷஸூக்தமும் தர்ம சாஸ்த்ரங்களுக்குள்ளே மநுதர்ம சாஸ்த்ரமும், மஹாபாரதத்தில் பகவத் கீதையும், புராணங்களுக்குள்ளே ஸ்ரீவிஷ்ணு புராணமும் முதன்மை பெற்றவை. அதுபோல ஆழ்வார்களுக்குள்ளே நம்மாழ்வாருக்கும், அவர் அருளிச் செய்துள்ள க்ரந்தங்களுக்குள்ளே திருவாய்மொழிக்கும் ஏற்றம் அதிகம். அத்தகைய திருவாய்மொழியானது த்வயத்தின் விவரணம் என்பது ஸார ஸங்க்ரஹத்தில் பிள்ளை லோகாசாரியர் காட்டிய அர்த்தமாகும். அதன்படி திருவாய்மொழியின் முதல் பத்து முழுவதும் த்வயத்தின் முதல் பதமான ஸ்ரீமச் சப்தார்த்தத்தை — எம்பெருமானுடைய ச்ரிய:பதித்வத்தை — விவரிக்கிறது என்பதை சென்ற இதழில் கண்டோம், இனி திருவாய்மொழியின் இரண்டாம்பத்து த்வயத்தின் இரண்டாம் பதமான நாராயண சப்தார்த்தத்தை விவரிக்கிறது என்றதை பிள்ளைலோகாசாரியர் விவரிக்குமாறு காண்போம்.



"இரண்டாம் பத்தால் எம்பெருமான் நாரணற்கு (2.1.7) என்றும், "எம்பிரான் எம்மான் நாராயணனாலே" (2.7.1) என்றும் "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்" (2.7.2) என்றும் நாராயணத்வம் ப்ரதிபாதித மாயிற்று" என்று அருளிச் செய்கிறார் பிள்ளைலோகாசாரியர். இம்மூன்று பாசுரங்களின் அர்த்தங்களையும் ஈண்டு அநுபவிப்போம்.

"வாயுந்திரையுகளும்" என்ற இரண்டாம் பத்து முதல் திருவாய்மொழியில் ஆழ்வாருக்கு நாயிகா பாவம். எம்பெருமானைப் பிரிந்து வருந்துகிற பிராட்டி நிலையடைந்த ஆழ்வார் கடற்கரைக்கு வருகிறார். பிரிந்தார் இரங்குவது நெய்தல் நிலத்திலே. நெய்தல் நிலமாவது—கடலும் கடல் சார்ந்த இடமுமாகும். அப்படிச் சென்ற ஆழ்வார் கடற்கரையில் வெளுத்த மேனியோடு சலிக்காமல் மீனை விரும்பி நின்று கொண்டிருந்த ஒரு நாரையைக் கண்டார். "நான் எம்பெருமானைப் பிரிந்த துயரினால் தூங்காமலிப்பது போல நீயும் எம்பெருமானைப் பிரிந்ததால் தான் தூக்கமில்லாமல் இருக்கின்றனையோ! எம்பெருமானைப் பிரிந்ததனால் எனக்கு உடம்பு வெளுத்தது போல உனக்கும் உடம்பு வெளுத்ததோ" என்று நாரையைக் கட்டிக் கொண்டு அழுகிறார் ஆழ்வார். ஆழ்வாரின் இப்படிப்பட்ட தன்மையை வர்ணிப்பது இரண்டாம் பத்து முதல் திருவாய்மொழி "வாயும்திரையுகளும்." தாம் ஒருவர் எம்பெருமானைப்பிரிந்த துக்கத்தால் உடல் வெளுத்து தூக்கம் இல்லாமல் இருப்பது கொண்டு உலகில் தூக்கமில்லாமல் இருப்பவர்கள் அனைவரும் எம்பெருமானைப் பிரிந்ததால்தான் தூக்கமில்லாமல் இருப்பதாகக் கருதி விட்டார் ஆழ்வார். இப்படிப்பட்ட திருவாய்மொழி இரண்டாம்பத்து முதல் திருவாய்மொழி. அதில் 7ம் பாட்டு "தோற்றோம் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு" என்பது.

நாராயணன் என்பதற்கு இருவகையாகப் பொருள் கூறலாம். நாரங்களுக்கெல்லாம் இருப்பிடமாக இருக்கிறவன்

நாராயணன். இது தத்புருஷ ஸமாஸம் (வேற்றுமைத் தொகை) அல்லது நாரங்களை இருப்பிடமாக வுடையவன் நாராயணன். இது பஹுவ்ரீஹிஸமாஸம் (அன்மொழித் தொகை). இவ்விரண்டு பொருள்களையும் கருதியே "தோற்றேன் மடநெஞ்சம் எம்பெருமான் நாரணற்கு" என்கிறார் ஆழ்வார் என்பது நம்பிள்ளை சுடு. யாருக்கு ஆழ்வாருடைய நெஞ்சு தோற்றதென்றால் வகுத்த ஸ்வாமியான எம்பெருமானுக்கு—அதாவது நாரங்களுக்கெல்லாம் இருப்பிடமாக இருப்பவனுக்கு—என்கிறார் ஆழ்வார். அப்ராப்த விஷயங்களில் தோற்காமல் ப்ராப்த சேஷியான எம்பெருமானுக்கே ஆழ்வார் நெஞ்சம் தோற்றது என்பதைக் காட்டுவது நாராயண சப்தம்.

நாரங்களை இருப்பிடமாக வுடையவன் நாராயணன் ஆகையால், தன்னுடைமைகளை விடமாட்டாத வத்ஸலன் அவன். தன் குழந்தை அபாஸ்த்துடனிருந்தாலும் அணைத்துக் கொள்ளும் மாத்ருத்வப்ரயுக்தமான வாத்ஸல்யத்தைக் காட்டும் சப்தம் நாராயணன். ஆதலால் அவ்வெம்பெருமானுக்குத் தோற்றது ஆழ்வாருடைய நெஞ்சு.

நாராயணன் எங்கிருக்கிறான் என்று வினவிய ஹிரண்யனுக்கு விடை சொன்ன ப்ரஹ்லாதன் "எங்குமுளன் கண்ணன்" என்று கூறினான்—அதாவது 'த்வய்யஸ்தி, மய்யஸ்தி' என்று கூறுகிறான். ஆஸ்திகனிடத்திலும் நாஸ்திகனிடத்திலும், உத்தம பதார்த்தங்களிலும் அதம பதார்த்தங்களிலும் வாசியற இருக்கிறான் நாராயணன். அப்படிப்பட்ட வாத்ஸல்யமுடைய நாராயணனுக்கு மடநெஞ்சம் தோற்றதாக அருளிச் செய்கிறார் ஆழ்வார் முதல் திருவாய்மொழி ஏழாம் பாட்டில். ஆக முதற்பாட்டின் அர்த்தம் நிரூபிக்கப்பட்டது.

இனி இரண்டாம் பாட்டையநுபவிப்போம். ஆலமர நிழல்போலே, எம்பெருமானுடைய கடாக்ஷம் ஆழ்வாரளவிலே நில்லாமல் அவருடைய ஸம்பந்திகளளவும் பர்யவஸித்தது. அதுபோலவே ஆழ்வாருடைய ப்ரேமமும் எம்பெருமானளவிலே நில்லாதே அவனோடு ஸம்பந்தமுடை

யாரளவிலும் பர்யவஸித்தது, 'அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் தம்மடியார் அடியோங்களே' என்று. "இது பிள்ளை வேட்டகத்தை விரும்பும்; பெண்பிள்ளை புக்கத்தை விரும்புமா போலே" என்பர் நம் பெரியோர். அதுபோல ஆழ்வாருக்கு பகவத் கடாக்ஷம் "கேசவன் தமர் கீழ் மேல் எமர் ஏழ் எழுபிறப்பும் மாசதிர் இது பெற்று நம்முடைய வாழ்வு வாய்க்கின்றவா" என்று 21 தலைமுறைக்கு வாய்த்தது. இந்தவாழ்ச்சியெல்லாம் "விண்ணோர் நாயகன் எம்பிரான் எம்மான் நாராயணனாலே" தனக்குக் கிடைத்த தாக அருளிச் செய்கிறார் ஆழ்வார். நாராயணனாலே என்ற ஏகாரத்தினால் அவனே அந்த உபகாரத்தைப் பண்ணினான்; இதில் நான்செய்தது ஒன்றுமில்லை என்கிறார் ஆழ்வார்.

இனி மூன்றாம் பாசுரத்தையநுபவிப்போம். "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன் வேதமயன்" (2-7-2) என்பது. முதலில் நாரணன் என்று சப்தத்தைச் சொன்னார். பிறகு 'முழுவேழுலகுக்கும் நாதன்' என்று அந்த சப்தத்தின் அர்த்தமான அசேஷசிதசித்வஸ்து சேஷித்வத்தை ப்ரதிபாதித்தார். பின்னர் 'வேதமயன்' என்று அவ்வர்த்தங்களை வேதம் சொல்லுகிறது என்றும் தெரிவித்தார். "நாராயண பரம் ப்ரஹ்ம, தத்வம் நாராயண:பர:' 'நாராயண பரோ ஜ்யோதி:' 'ஆத்மா நாராயண:பர:' 'சக்ஷுச்ச த்ரஷ்டவ்யஞ்ச நாராயண:' 'ச்ரோத்ரஞ்ச ச்ரோதவ்யஞ்ச நாராயண:' 'சம்புச்ச நாராண:' 'சிவச்ச நாராயண:' என்று எல்லா சப்தங்களோடும் ஸாமாநாதிகரண்யேன நாராயண சப்தத்தைச்சொல்லுகிறது வேதாந்தம். அதையே ஆழ்வாரும் 'நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன் வேதமயன்' என்று முதலிக்கிறார்.

ஆக இரண்டாம்பத்து முழுவதும் நாராயண சப்தார்த்தத்தை ஆழ்வார் ப்ரதிபாதித்தாராயிற்று.

(தொடரும்)

# தேவு மற்றறியேன்—2

பேராசிரியர் Dr. V. V. ராமாநுஜம்

நாதமுனிகள்: "நாய்க்குடலில் நல்நெய் தங்காது" என்ற வசனத்துக்கு ஏற்ப இம்மண்ணுலகில் ஸம்ஸாரிகளிடையே ஆழ்வார் பல காலம் வாழவில்லை. அவருடைய அவதாரம் முடிந்து விண்ணுடு அடைந்த பின்னர் மதுரகவிகள் அவருக்கு பொலிந்து நின்ற பிரான் திருக்கோயிலில் ஸன்னிதி அமைத்து அர்ச்சையாக விக்ரஹப்ரதிஷ்டை செய்வித்து, திருவிழாக்கள் நடத்தி, அவருடைய பாமாலைகளைப் பாடிக்கொண்டும் பாடுவித்துக்கொண்டும் வாழ்ந்திருந்தார். ஆனால் மதுரகவிகளுக்குப் பிறகு எக்காரணத்தினாலோ திருவாய்மொழியுள்பட ஏனைய ஆழ்வார்களுடைய திவ்விய ஸூக்திகளும் மறைந்துவிட்டன. இவைகளை மறுபடியும் உலகில் தோற்றுவித்துப் பரவச் செய்யும் பணி நாதமுனி என்பவருடையதாக அமைந்தது. இவர் காட்டு மன்னார் கோவிலில் (வீரநாராயணபுரம்) கோயில் கொண்டுள்ள மன்னார் என்ற எம்பெருமானுக்குக் குற்றேவல் புரிந்து வாழ்ந்திருந்த மெய்யன்பர் ஆவார்.

ஆராவமுதே: ஒருநாள் மன்னனாரைத் திருவடி தொழவந்த ஒரு அடியார் குழாம் "ஆராவமுதே" என்று தொடங்கும் திருவாய்மொழிப் பதிகத்தைப் பாடக்கேட்டு, அத்தெய்விகப் பாசுரங்களில் மிகவும் ஈடுபட்டு அவற்றை அவர்களிடமிருந்து கற்றார். அப்பதிகத்தில் கடைசியில் "குருகூர்ச் சடகோபன் சொன்ன ஓராயிரத்துள் இப்பத்து" என்று இருப்பதைக் கண்டு, கற்பித்தவர்களை, "மற்றுமுள்ள திருவாய் மொழிகளையும் பாட வல்லீரோ?" என்று கேட்க, அவர்கள் இப்பதிகம் ஒன்று

மட்டுமே தெரியும் என்று கூறிவிட்டனர். இந்த ஆயிரம் பாசுரங்களையும் அறியக் கற்றவராக ஆகவேண்டுமென்று திருக்குருகூர் சென்று விசாரிக்க, அங்கும் திருவாய்மொழி யாயிரமும் வல்லார் ஒருவரையும் காணவில்லை. ஆனல், மதுரகவிகளின் சிஷ்யபரம்பரையில் வந்த ஒரு பெரியவர், "ஆழ்வாரின் பிரிய சீடரான மதுரகவிகள் ஆழ்வார் துதியாகப் பாடிய கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற பதிகம் உண்டு. அதை திருப்புளியாழ்வார் அடியில் தூய மனத்தினராய் 12000 தடவை பாடினல் ஆழ்வார் தோன்றி அருள் செய்வார் என்று பெரியோர் பணிப்பர்" என்று கூறினர். அதைக் கேட்ட நாதமுனிகள் அந்தபத்துப் பாசுரங்களை ஆசையுடன் கற்று ஆழ்வாரிடம் தம் மனதை நிலைபெறச்செய்து திருபுளியாழ்வாரடியில் இருந்து 12000 முறை கண்ணிநுண்சிறுத்தாம்பை இசைத்து ஆழ்வாரை பக்தியுடன் ஏத்தினர். ஆழ்வார் இவர் பாட்டுக்கு உகந்து இவர் முன் தோன்ற, இவரும், "தேவரீர் பாடிய திருவாய்மொழியாயிரத்தையும் அடியேன் அறியும்படி உபதேசிக்கவேண்டும்" என்று இறைஞ்ச, ஆழ்வாரும் மிகவும் மகிழ்வெய்தி, தாம் பாடிய திவ்வியப்பிரபந்தங்களுடன் மற்றைய ஆழ்வார்கள் பாடியுள்ள எல்லாப் பாசுரங்களையும் உபதேசித்தருளினர். இவற்றை யோக முறையில் ஆழ்வாரிட மிருந்து பெற்ற நாதமுனிகளும் அவைகளை அடைவு படுத்தித் தம் மருமக்களான கீழையகத்தாழ்வார், மேலையகத்தாழ்வார் இருவருக்கும் இசையுடன் கற்பித்து அவர்கள் மூலம் இவற்றைப் பரவச் செய்தார். இப்படி ஆழ்வாருடைய அருள் பெற்ற நாதமுனி கண்ணிநுண்சிறுத்தாம்பைக் கொண்டே எல்லா திவ்வியப் பிரபந்தங்களையும் பெற்று நமக்கு அருளினர்.

ஆசாரியபரம்பரை : நாதமுனிகளுக்கும், மதுரகவிகளின் இன்பப்பாக்களுக்கும் (கண்ணிநுண்சிறுத்தாம்பு) நாம் பெரிய நன்றிக்கடன் பட்டுள்ளோம். ஆழ்வார் நாதமுனிக்கு அறியவேண்டும் அர்த்தங்கள் எல்லாவற்றையும் உபதேசித்தார். நாதமுனிகள் ஆழ்வாரிடம் பெற்றது யோக முறையிலே. நாதமுனிகள் தம் சீடருக்கு நேரே ஸம்பிரதாயார்த்தங்களை உபதேசித்து அந்த சிஷ்ய பரம்பரை (உய்யக் கொண்டார்—மணக்கால் நம்பி—ஆளவந்தார்—எம்பெருமானர் என்ற பரம்பரை) மூலம் நமக்கும் நல்கியுள்ளமையால் இவர் நமது தரிசனத்தில் பெரிய முதலியார் ஆகிறார். இந்த பரம்பரை மூலம் நமக்குக் கிடைத்துள்ள பரமார்த்தம் "ஆசார்யாபிமானமே உத்தாரகம்" என்பது.

தேவு மற்றறியேன் : தனது நல்லுரைகளால் நமது ஆத்மாவைக் கடைத்தேறப் பண்ணி வாழ்விக்கும் ஆசாரியனே அரும்பெரும் தெய்வம் என்று போற்றுவது சரம பர்வ நிஷ்டை எனப்படும். எம்பெருமானைப் பற்றி அவனால் வாழ்ச்சி என்றிருப்பது ப்ரதம பர்வம் (முதல் நிலை). ஆசாரியனாலே வாழ்ச்சி என்றிருத்தல் சரமபர்வம் என்ற முதுநிலை (கடைநிலை). நம்மாழ்வார், "பயிலும் சுடரொளி", "நெடுமாற்கடிமை" என்ற இரண்டு திருவாய்மொழிகளில் எம்பெருமானைவிட அவனடியார் சீரியர்; அவரே எம்மையாளும் பரமர் என்ற பொருளை வெளியிட்டார். "............எந்தை பிரான் தனக்கு அடியார் அடியார் தம்மடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம்மடியார் அடியோங்களே" (3-7-10) என்றும், "..........

பொன்னுழிக்கை என்னம்மான் நீக்கமில்லா அடியார் தம்மடியார் அடியார் எம்கோக்கள்; அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்பாடே'' (8-10-10) என்றும் வெளியிட்டருளினர். இவைகள் ஆழ்வார் திருவுள்ளத்திற்கு மிகவும் இசைந்த அர்த்தங்கள் என்று பற்றிய மதுரகவிகள், திருமாலின் மெய்யன்பரான அடியார்களில் அவனையே எல்லாமாகப் பற்றிய தமது ஆசாரியரான ஆழ்வாரே தமது முழுமுதற் கடவுள் என்று திடமாகக் கொண்டார். எம்பெருமானையே காற்கடை கொண்டு, ஆசாரியனை யொழிய தேவுமற்றறியாதவராய் இருப்பது மதுரகவி நிஷ்டை எனப்படும். எதிராஜரையே தமது எல்லாமாகப்பற்றி யதீந்த்ரப்ரவணர் என்று புகழ்பெற்ற ஸ்வாமி மணவாளமாமுனிகளும், "மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்" என்று தம் சரித்ரத்தை சொல்லிப் பெருமையுறுகிறார். ஆசாரியனே (குருவே) பரம்பொருள் என்ற உண்மைப் பொருளை எம்பெருமானார் ஆளவந்தாரின் சீடர்களில் தலைவரான திருவரங்கப் பெருமாளரையரை ஆறுமாதம் பணி செய்து உகப்பித்து ரகஸ்ய உபதேசமாகப் பெற்றதாக குரு பரம்பரை வரலாறுகள் கூறுகின்றன.

மதுரகவியாழ்வாருடைய நிலைபற்றிக் கூற வேண்டியது இன்னும் பலவுண்டு. மேலே காணலாம்.

(தொடரும்)

# மோட்சத்துக்கு ஒரு வழி

## சாண்டில்யன்

வைணவர்கள், உலகத்தை வாழ்த்தும்போது ''அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ... கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ'' என்று வாழ்த்துகிறார்கள். இதிலிருந்து அடியார்களுடைய வாழ்வில்தான் உலக வாழ்வும் இணைந்திருக்கிறது என்பது புலனாகிறது. இதையொட்டியே குலசேகரரும் ''பரிசாக ப்ருத்ய ப்ருத்ய ப்ருத்யஸ்ய ப்ருத்ய இதிமாம் ஸ்மர லோகநாத'' என்று சொன்னார். அதாவது ''ஏ லோக நாதா! உலகமனைத்துக்கும் மெய்ப் பொருளே! உன் அடியார்களில் முதல்வனாக என்னை வைத்து விடாதே. உன் அடியார்க்கும் அடியார்க்கும் அடியார்க்குமாய் கடைசி அடிமையாக நினைத்து அருள் செய்'' என்று கேட்டுக் கொண்டார். இத்தகைய அடிமைத் தொழில் (தாஸ வ்ருத்தி) வைணவ மதத்திற்கே தனிச்சிறப்பு. இதை மிகப் பெரியவர்கள் கூட உடனடியாக உணர்வதில்லை என்பதற்கு ஆளவந்தார் சீடரான கஜேந்திர தாஸர் எடுத்துக் காட்டாக விளங்கினார்.

கஜேந்திர தாஸர் உண்மையில் பரம பாகவதர். அவர் கச்சி வரதனையே நம்பி வாழ்ந்ததாலும் அதற்காகவே பூவிருந்தவல்லியிலிருந்த தமது இருப்பிடத்தை காஞ்சிக்கு மாற்றிக் கொண்டதாலும் அவரை எல்லோரும் திருக்கச்சி நம்பி என்று சிறப்புப் பெயரால் அழைத்தார்கள். திருக்கச்சி நம்பிக்கு மற்றவர்களுக்கு இல்லாத ஒரு பெரும் பாக்கியம் இருந்தது. அவர் வரதராஜப் பெருமாளிடம் பிரதி தினம் இரவில் நேரிடையாகப் பேசி வந்தார். இதற்காகவே கோயில் காலம் முடிந்து பட்டர்கள் சென்ற பின்புகூட சந்நிதியில் அவர் நிற்பது வழக்கம். நம்பியினுடைய பிரபாவத்தை அறிந்த யாரும் அவர் எம்பெருமானுடன் தனித்துக் காலம் கழிப்பதைத் தடை செய்யவில்லை.

இப்பேற்பட்ட மகத்துவமுள்ள திருக்கச்சி நம்பியிடம் ஒரு தாஸர் பணி புரிந்து வந்தார். அவர் கோயில் குளம்

எதற்கும் போவதில்லை யென்கிற திட சித்தத்துடன் வாழ்க்கையைக் கழித்துக் கொண்டு திருக்கச்சி நம்பிக்கு சிச்ருஷை செய்வதையே வாழ்க்கைப் பயனாக நம்பியிருந்தார். திருக்கச்சி நம்பி வெளியில் கிளம்பிய போதெல்லாம் தாஸர் அவரைத் தொடர்ந்து அவரது பாதங்கள் படுமிடத்திலிருந்து மண்ணை அள்ளித் தம் தலையில் போட்டுக் கொள்வார். இதனால் அவரைச் சிலர் பைத்தியம் என்று கூட நினைத்தார்கள்.

இப்படி பாகவத சேவையையே பிரதானமாகக் கொண்டு வேறெந்த பலனையும் கருதாமல் வாழ்ந்து வந்த தாஸர் ஒரு நாள் திருக்கச்சிநம்பிமுன்பு கை கட்டி வாய் புதைத்து நின்றார்.

தாஸர் எதையோ கேட்க விரும்புகிறார் என்பதை உணர்ந்த நம்பியும் "தாஸா உனக்கு என்ன வேண்டும்?" என்று வினவினார்.

"தேவரீர் தினமும் பெருமாளோடு பேசி வருகிறீர்—..." என்று தாஸர் இழுத்தார்.

"ஆமாம். அதற்கென்ன ?"

"பெருமாளிடமிருந்து ஒரு தகவல் தெரிய வேண்டும் அடியேனுக்கு"

"என்ன தகவல் ?"

"ஸ்வாமி இன்று பெருமாளிடம் பேசும்போது எனக்கு மோட்சம் உண்டா என்பதைக் கேட்டுச் சொல்ல வேண்டும்" என்று தாஸர் விண்ணப்பித்தார்.

திருக்கச்சி நம்பியும் "அதற்கென்ன கேட்டுச் சொல்கிறேன்" என்று பதில் சொன்னார்.

அன்று இரவு தேவப் பெருமாளிடம் பேசிக்கொண்டிருந்த போது "என்னிடம் தாஸன் ஒருவனிருக்கிறான். தனக்கு மோக்ஷம் உண்டா என்று கேட்கச் சொன்னான்," என்று திருக்கச்சி நம்பி விண்ணப்பம் செய்தார்.

வரதராஜன் மந்தகாசம் செய்தார். "அவன் உன்னிடம் தாசனாயிருக்கிறான். பாகவத கைங்கர்யம் செய்கிறான். அவனுக்குக் கட்டாயம் மோட்சமுண்டு" என்று பெருமாள் சாதித்தார் மந்தகாசத்துக் கிடையில்.

இதைக் கேட்டுக்கொண்டு பெருமகிழ்ச்சியுடன் இல்லம் திரும்பினார் திருக்கச்சி நம்பி.

"ஸ்வாமீ! அடியேனைப் பற்றிப் பெருமாளிடம் கேட்டீரா" என்று கேட்டார் தாஸர்.

"கேட்டேன். நீ பாகவதக் கைங்கர்யம் செய்வதால் கட்டாயம் மோட்சமுண்டு என்று பெருமாள் சொன்னார்" என்று குதுகாலத்துடன் தெரிவித்தார் நம்பி.

அப்போதுதான் அவர் மனதில் ஒரு சந்தேகம் பளிச்சிட்டது. அதை வாய்விட்டும் சொன்னார். "தாஸா! உனக்கு மோட்சமுண்டா என்று கேட்டேனே தவிர எனக்கு மோட்சமுண்டா என்று கேட்கவில்லையே" என்று தாசரிடம் வருத்தப்பட்டார்.

தாஸர் பதில் சொன்னார், "ஸ்வாமீ இதற்காக நீர் பெருமாளை சிரமப் படுத்த வேண்டாம். உமக்கு நிச்சயமாக மோட்சம் கிடையாது. நீர் எந்த பாகவதரிடம் போய் கைங்கர்யம் செய்திருக்கிறீர். தினம் பெருமாளிடம்தானே போய் நிற்கிறீர்" என்றார்.

இதைக் கேட்ட திருக்கச்சி நம்பி அசந்து போனார். "அடடா! இந்த தாசனுக்கு இருந்த ஞானம் எனக்கில்லையே!" என்று வியாகூலப் பட்டார் அந்த நிலையை சீர்திருத்திக் கொள்ள மறுநாளே பெரிய நம்பியிடம் சென்று தாஸவ்ருத்தியில் ஈடுபட்டார். எம்பெருமானும் உள்ளம் உகந்து திருக்கச்சி நம்பி இகத்தில் இணையிலாப் பெயரையும் பரத்தில் நித்ய சூரிகள் நிலையையும் அடையப் போகிறார்" என்று திருவுள்ளம் பற்றினார்.

திருக்கச்சி நம்பியின் இதயத்தில் பாகவத கைங்கர்யத்தால் ஆத்மாவின் மயர்வு மறைந்து மதிநலம் உதயமாயிற்று.

# அழியாத கதாபாத்திரங்கள்

## (1)

### "தீபம்" நா. பார்த்தசாரதி

ஊழிஊழியாக நிலைத்துப் பெருமை பெற்று வரும் பாரத நாட்டின் பழம்பண்பாடு, பழஞ்சிறப்பு இவைகளுக்கு இன்றைய அடையாளங்கள் என்னவென்று பிறநாட்டார் கேட்க நேர்ந்தால் நாம் எதைச் சுட்டிக் காட்டுவோம்? எவற்றைக் கொண்டு நம் முடைய பழமையைக் காப்பாற்றிக் கொள்வோம்? இத்தகைய சந்தேகங்கள் நமக்கு எப்போதாவது எதற்காவது ஏற்பட்டிருக் கிறதா என்ன? ஏற்படாவிட்டால் என்ன? நாம்தாம் ஏற்படுத்திக் கொள்வோமே! சந்தேகங்கள் ஏற்பட்டால்தானே விடைகளைக் காணவேண்டுமென்ற ஆர்வமே தோன்றுவதற்கு வாய்ப்பிருக் கிறது?

நம்மிடம் நமக்கே உரிமையுடைய மூன்று மாபெரும் இதிகாச காவியங்கள் இருக்கின்றன. அம்மூன்று காவியங்களும் ஒவ் வொரு பகுதியில் ஒவ்வொரு வகையில் நமது பண்பாட்டின் தொன்மையையும் பெருமையையும் பறைசாற்றி உலகுக்கு என் றென்றும் அறிவிக்கக் கூடியனவாக இருக்கின்றன.

இராமாயணம் பெண்மையின் வெற்றியைச் சொல்கிறது. பாரதம் அறத்தின் வெற்றியைச் சொல்கிறது. ஆனால் பாகவதம் யாருடைய வெற்றியைச் சொல்லுமோ என்று எண்ணுகிறீர்களல் லவா? உலகில் அறத்தோடு இயைந்தனவும் நல்லனவுமாகிய யாவும் வெற்றி பெறுவதற்கு மூலமான பரம்பொருள் ஒன்று இருக் கிறதென்று நமக்குத் தெரிந்திருக்கின்றதே; அந்தப் பொருளின் அசாதாரணமான வெற்றியை விவரிப்பதுதான் பாகவதம். அதா வது கண்ணனைப்பற்றிய கதை.

எல்லா மனிதர்களுக்கும், எல்லாப் பொருள்களுக்கும் வெற்றியைக் கொடுத்த—கொடுக்கிற—கொடுக்கும் பரம்பொருளின் வெற்றியைக் கூட வியப்புடன் நோக்க வேண்டுமா? வியப்பு என்பது பார்க்கிற பொருளில் இல்லை. பார்க்கப் படுகிற விதத்தில் தான் வியப்போ வியப்பின்மையோ இருக்கிறது. மனித உலகத்தில் மனிதர்களுக்கிடையே கடவுள் தன் இதயக் கருத்துக்களை எளிய முறையில் நிறைவேற்றிக் கொண்டதைப் பாகவதம் சொல்கிறது. பகவானைப் பற்றியது பாகவதம். கண்ணனின் திருவிளையாடல்கள் நிறைந்த ஒரு தொகுதியென்றே பாகவதத்தைக் கூறலாம்.

இங்கே மூன்று இதிகாச காவியங்களின் நாயகர்களைப் பற்றியும் ஓரொரு நினைவு எழுகின்றது. இராமனைப் பற்றிச் சிந்திக்கும் போது, உரிமையை நிலைநாட்டித் தீமையை அழிப்பதற்காகப் போராடிய வீரத்தலைவன் ஒருவனின் உருவம் காட்சியளிக்கிறது. பாரதத்தின் கதாநாயகனென்று, குறிப்பிட்ட யாரையும் தனித்தனியாகச் சொல்லி விட முடியுமா? பாண்டவர்கள் ஐவருமே பாரதக் கதைக்கு நாயகர்கள் தாம். பாண்டவர்கள் சத்தியத்தையும், தருமத்தையும் நம்பிப் போராடி வெற்றி பெற்ற நினைவு பாரதக் கதையைப் பற்றி எண்ணும்போது தோன்றுகிறது. ஆனால் பாகவதக் கதையைப் பற்றி நினைக்கும்போது அற்புதமும் அதிசயமுப் வியப்பும் கலந்து ஒருவகைப் புதுமையான அனுபவம் நமக்கு ஏற்படுகிறது.

கண்ணன் என்னும் தெய்வீகக் குழந்தை ஒன்று இன்ப துன்பங்கள், ஆசாபாசங்கள், அவலக் கவலைகள் மிகுந்த மனித முயற்சிகளுடன் விளையாடிச் சிரித்துக் கொண்டே அவற்றை வெல்கிறது: வென்று முன்னேறுகிறது. தன் பிறவிப் பயனை முழுமையாக்குகிறது. தெய்வத்தின் இந்த விளையாட்டை அழகாக விவரித்து சொல்லுவதுதான் பாகவதக் கதை.

இராமாயணத்தில் சீதையின் துன்பங்களைப் படிக்கும்போது இராவணனை எண்ணிக் குமுறுகிறோம். பாரதத்தில் பாண்டவர்களின் துன்பங்களைப் பார்க்கும் போது துரியோதனாதியர்களை எண்ணிக் குமுறுகிறோம்.

பாகவதத்தில் கண்ணனுக்கு ஏற்படும் துன்பங்களை நினைக்கும் போது நாம் குமுறுவதில்லை சிரிக்கிறோம். கதையைப் படித்துக் கொண்டே போகும் போது 'இந்தக் கண்ணனால் இவைகளைப் போன்ற துன்பங்களை உறுதியாக வெல்ல முடியும்' என்ற நம்பிக்கை நமக்கே உண்டாகி விடுகிறது. எனவே பாகவதக் கதையைப் படிப்பதனால், கண்ணனுக்கு மண்ணுலகில் ஏற்பட்ட அனுபவங்களை அறிவதனால், நமக்கு நம்பிக்கையும், திருப்தியும் கிடைக்கின்றன. இன்னது, இவ்வளவினது இப்படிபட்டதென்று விவரித்துச் சொல்ல முடியாத ஒருவகைத் தெய்வீக மகிழ்ச்சி பாகவதக் கதைக்குள் இடையீடின்றிப் பரந்திருக்கிறது. பாகவதம் பாரதம் ஆகிய இதிகாசக் கதைகளும், கதாபாத்திரங்களும் மத்திய யுகத்து அநுபவங்கள். அவற்றை இப்போது நினைத்தாலும் பெருமையாக இருக்கிறது.

